௨

குறை களைபவனே!

ராகம் : ரதிபதிப்ரியா] [தாளம் : ஆதி

பல்லவி

சரவண பவனே சமயமி தாள்வாய் (ச)

அனுபல்லவி

அரிதிரு மருகா ஐங்கரன் இளையாய்!
அழைப்பவர் உள்ளம் அலர்ந்திடக் காணும் (ச)

சரணம்

ரதிபதிப்ரியனே ஆரமு தெனத் தமிழிசை
ரசிப்பவர் மனமது ரமித்திட அருள்வாய்
அதிபதி யானய் அமரர்கள் சேனைக்கும்
அன்பர்கள் மனதிற்கும் அடியார்
காதலுக்கும் (ச)

குமர சண்முகனே குறை களைபவனே!
குறத்தியின் மனதைக் கொள்ளை கொண்
டவனே!
சுமையெனும் வாழ்வை சுவைதரச் செய்வாய்
சுப்பிர மணியெனும் சுந்தர வதனனே. (ச)

— (விஜயவாணன்)

புதிய பிரதமர் வாழ்க!

ஸ்ரீ சாஸ்திரி அவர்களின் மறைவுக்குப் பின் நமது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருந்த பீதியும், அவநம்பிக்கையும் நீங்கி, நல்ல தலைமையில் பாரதம் மீண்டும் வரவேண்டும் என்று அவர் ஆன்மா நினைத்திருக்கக்கூடும்.

எனவே, பிரதமர் தேர்தலில் நமது நாட்டின் ஒப்பற்றத் தலைவர் ஸ்ரீ ஜவஹர் அவர்களின் புதல்வியார், **ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள்** தேர்தலில் ஜெயித்து பதவி ஏற்றார். இது நமது நாடு செய்த பெரும் பாக்கியமாகும். ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் சென்ற பாதையை மீண்டும் தொடர்ந்து சமாதான சகவாழ்வுக்கும், நமது நாட்டின் கௌரவத்திற்கும் அயராது உழைக்கும் நிறைந்த சக்தியைக் கொடுக்க எல்லாம் வல்ல பவரோக வைத்தியநாதனை வேண்டுகிறோம்.

மேலும் குறிப்பாக நாட்டு வைத்திய முறைகளுக்கு தனி ஆர்வமும் அக்கறையும் காட்டுவார் என மக்கள் சார்பில் நம்புகின்றோம்.

மூலிகைமணி மருத்துவ மாத இதழ்.

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்.

ஆ. இரா. கண்ணப்பர். *R. M. P. Regd*

ஆண்டு சந்தா: ரூ 5—00 :: தனிப்பிரதி: 50 காசு

ஆறு மாத சந்தா கிடையாது.

மாசி மாத மணியில்

1.	குறை களைபவனே! (பாடல்)	...	1
2.	புதிய பிரதமர் வாழ்க!	...	2
3.	ஒழுக்கம் வழுக்கினால் (தலையங்கம்)	...	5
4.	தபால் அதிகாரிகளுக்கு	...	7
5.	நம் நாட்டு மூலிகைகள் (78-வது கட்டுரை)	...	9
6.	வேலூர் செய்திகள்	...	14
7.	நோயும் மருந்தும்	...	15
8.	இறவாதிருக்கும் வழி	...	25
9.	அகத்தியர்	...	27
10.	விஷ ஜந்துக்களும், மூலிகைகளும்	...	30
11.	எல்லாம் ஈசன் செயல்	...	32
12.	இலட்சியவாதி	...	33
13.	மூலிகையும் போலிகளும்	...	36
14.	பயனுள்ள சில குறிப்புகள்	...	37
15.	மாதா பிதா செய்தவை மக்களுக்கு	...	39
16.	புல்லுருவி	...	41
17.	மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணம்	...	44
18.	இதய ஒலி	...	47
19.	பவானி விழா அனுபந்தம்	...	50
20.	பவானி விழா புகைப்படங்கள்	...	56

போன் நெம்பர் 726. :: தபால் பெட்டி 26

அலுவலகம் :— 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ.)

மூலிகை மணியில் வெளியாகும் கட்டுரைகள் பதிப்பகத்திற்கே உரியது ஆசிரியர் உரிமையின்றி யாரும் பயன்படுத்தக்கூடாது. கதையில் வரும் பெயர்கள் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவதல்ல.

ஒரே நொடியில் நோயெல்லாம் போக்குவேன்!
அடே யப்பா! நோய்மட்டுமா போகும்! உயிரையும் கூட ஒரு நொடியில் போக்கி விடுகிருயே! ஊசிப் பிசாசே போ.
1 2 3
காட்டுன்

உ

முருகா.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே

மூலிகை மணி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

மலர் 2 விசுவாசு௵ மாசி௴ (பிப்பிரவரி 66) இதழ் 4

ஒழுக்கம் வழுக்கினால்?

நமது நாட்டின் நாகரீகம், ஒழுக்கம், பண்பாடு பழக்கவழக்கம், என்று பெருமையுடன் பேசிவந்த காலம் மறைந்து வருகிறது! இன்னும் சிறிது காலம் சென்றால் எல்லாம் தலைகீழாகி விடுமோ! என்று அறிவுடைய பெரியோர்கள் அஞ்சுகின்றனர். இது முற்றிலும் நியாயமே.

நாகரீகம் என்பது தற்காலம், புறவாழ்க்கைக்கு காரணமாகி நிற்கும் வெறும் ஆடம்பரப் பொருள்கள், அழகுசாதனங்கள், டாம்பீக வாழ்க்கை போலிக் கவுரவம், இவைத்தான் அடிப்படையாகக் கொண்டுவிட்டன.

ஒழுக்கம் என்பது மனதிலிருந்து பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வரும் நல்லொழுக்கம், தூய்மையான எண்ணம், பண்புள்ள நடத்தை, பெரியோர்களிடம், பெண்களிடம் மரியாதை, எளிய உடை, பணச்சிலவு இல்லாத சத்துமிகுந்த உணவு, தெய்வபக்தி, பிறர் உபகாரம், அன்பு, இரக்கம், கருணையுள்ளம், இவைகளைத்தான் அடிப்படையாகக் கொண்டு

இருந்தன. நாளடைவில் இந்த ஒழுக்கமெல்லாம் அந்நிய நாட்டின் நாகரீகம் கலந்துவிட்டதால் தகர்ந்துபோய்விட்டது. தற்காலம் பண்டைய முறைப்படி வாழ்வோரை விரல் விட்டு எண்ணிவிடலாம்!

காலத்தின் கூற்று எண்ணத்தில் தூய்மை அகன்றுவிட்டது. எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆசையின் காரணமாக எந்த தொழிலிலும் உண்டாகிவிட்டது. தர்ம சிந்தையுடன் தானும் ஜீவனம் செய்து பிறருக்கும் உபகாரமாக இருக்கவேண்டும் என்ற சிந்தனை உடையவர்களை காண்பது அரிதாகிவிட்டது. இப்படி பொதுநல நோக்கம் குறுகி, சுயநல நோக்கம் உள்ளத்திலே குடி கொண்டதிலிருந்து, அழிவுப் பாதைக்குத்தான் விதைபோடுகிறோம் என்பதை நினைப்பவர்கள் இல்லை.

சீர்திருத்தம் என்ற பெயரால் மேனாட்டு பழக்கங்களான கிருப்புத்தலை கோட்டு, சூட்டு, காலணி, கழுத்தணி (டை), காகித சுருட்டு (சிகரெட்), ஆகியவைகள், வெள்ளையன் வெளியேறிய பிறகு நம்மை அதிகமாகப் பற்றிக்கொண்டு விட்டது. மேலும் அடிக்கொரு வார்த்தை ஆங்கில பதங்களை பிரயோகித்து "சே, குடுமி வைத்துக்கொள்வதாம்! பழயசோறு, கூழ், களி, தின்பதாம்! 4 முழம் வேஷ்டி கட்டி, ஒரு சட்டையைப்போடுவதும்!, கல்லை வைத்து சாமி கும்பிடுவதாம் சே! சே! இன்னும் நாகரீகம் தெரியாதவர்கள். மூட நம்பிக்கை" என்றெல்லாம் பெற்றோரைக் கண்டு எள்ளி நகையாடும் பிள்ளைகளைத்தான் காண்கிறோம். இன்னும் சொல்லப் போனால் பெற்றோரை கண்டபடி வைது, உதைக்கும் பிள்ளைகளைக்கூட காணலாம்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? மன ஒழுக்கம் போனதுதான். புற ஒழுக்கம் என்பது வெறும் அலங்காரந்தான். ஒருவன் நன்கு அலங்கரித்துக்கொண்டால் மிக அழகாகத்தான் இருக்கிறான் என்று நினைக்கிறோம் ஆனால் இந்த வெறும் புற அழகை மட்டும் கொண்டு அளவிட முடியுமா?

ஆடம்பரத்தையும், அழகையும் விரும்புபவர்கள் தன்னைப்பற்றி பிறர் பெருமைபட வேண்டும், போற்றவேண்டும், புகழவேண்டும் என நினைக்கிறார்கள். புற அழகை எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் விரும்புகிறார்களோ? அவ்வளவுக்கு அவர்களின் மன தூய்மை கெட்டுப்போய் இருக்கும்! காரணம், தன்னைப் புகழவும், போற்றவும், விரும்பும் மனது மமதை கொள்ளுகிறது. கர்வம் மண்டைக்கு ஏறி தலைகனத்துப்போகிறது. தன்னைவிட அதிக செல்வாக்கு உள்ளவர்களைக் கண்டு ஆடம்பர மனது பொறுமையும், அசூயையும் அடைகிறது. இதனால் அத்தகைய, தனக்கு நிகரான செல்வாக்கு படைத்தவர்களை சமயம் பார்த்து காலை வாறிவிடும் துணிவும் ஏற்படுகிறது.

இத்தகைய (அ) நாகரீகத்தை, புற ஒழுக்கத்தைத்தான் ஒழுக்கம் என்று வியாக்கியானம் செய்ய முற்பட்டிருக்கின்றனர். அதாவது ஒழுக்கத்திற்கு வழுக்கின பொருள் தருகின்றனர். நேர்மை தவறிய செயல்கள், வியாபாரம், வாணிபம் யாவும் இந்த வழுக்கல் வியாக்யானத்தையே பயன்படுத்த ஆரம்பித்துவிட்டன.

மன ஒழுக்கம் தவறியதற்கு எத்தனையோ வகை காரணங்களைக் கூறலாம். மிக முக்கியமாக தற்கால வாலிபர்களை முழுக்க முழுக்க திரை பட கதை வசனங்கள் கெடவைத்து விட்டது என்பதை இந்த மணியில் 'நோயும் மருந்தும்' என்ற பகுதியில் ஒருவர் எழுதிய தமது பையன் கெட்ட சோகக்கதை ஒன்றே சான்ருகும். தற்காலம் திரைப்படம் எடுப்பவர்களுக்கு மனசாட்சியே இல்லையா? அல்லது இவர்கள் அந்நியநாகரீகத்தை தழுவியதால் நமது நாட்டுப் பற்றும், இனப்பற்றும் நீங்கிவிட்டதா? என்று கூட நினைக்க வேண்டியுள்ளது. மன ஒழுக்கத்தை கெடவைக்கும் திரைப் படங்களை அங்கீகாரம் செய்து அனுமதி தந்த (சென்சார் போர்டு) அதிகாரிகளுக்கு இது தெரியவில்லையா? அல்லது தெரிந்தும் தெரியாதது போல் இருந்துவிட்டார்களா? என்றும் நினைக்கவேண்டியுள்ளது. வருங் காலத்தில் இன்னும் என்னென்ன காட்சிகளையெல்லாம் படமாக்கி ஒழுக்கத்திற்கு ஒரு வழுக்கல் வியாக்கியானம் செய்து வெளியிடப்போகிருர்களோ? இந்த வழுக்கல் வியாக்கியானம் தடையாகி என்று நிறுத்தப்படுகின்றதோ, அன்றுதான் நமது நாடு சுபிட்சப் பாதையில் போகும். வளர்க மன ஒழுக்கம்!.

தபால் இலாகாவுக்கு வேண்டுகோள்!

கடந்த சில மாதங்களாக தபால் வழி அனுப்பும் மூலிகை மணி, சந்தாதாரர்களுக்கு வந்து சேர்வதில்லை என்ற புகார் நிறைய வர ஆரம்பித்துள்ளது. தபால் மூலமாக அனுப்பப்படும் கடிதங்களோ அல்லது மாதச் சஞ்சிகைகளோ ஒன்று இரண்டு ஓரிரு சமயம் தவறி விடுவது சகஜம். ஆனால் அடிக்கடியும் அதிக அளவில் குறிப்பிட்டவைகளே தவறுவதில் ஆச்சரியமும் அச்சமும் தான் கொள்ள வேண்டியிருக்கிறது. பொது மக்கள் குறிப்பாக நல்ல கருத்துக்களையும், நன்மை பயப்பவைகளுக்குத்தான் முன் கூட்டி சந்தா பணத்தை மணியாடர் மூலம் அனுப்பி (தபால் மூலம் தவருது வரும் நம்பிக்கையில்) சந்தா சேர்கிருர்கள். இவர்களுக்கு அனுப்பும் சஞ்சிகைகள் உரிய காலத்தில் போய் சேரவில்லையானுல் எவ்வளவு வருத்தப்படுவார்கள் என்று சொல்லத் தேவையில்லை. சிலர் வருஷம் பூராவும் சேர்த்து பைண்டு செய்து பத்திரப்படுத்துகிருர்கள்.

மூலிகை மணி சந்தா அன்பர்களில் பலருக்கு சேராதபடியால் அவர்கள் மனம் வேதனைப்பட்டும், வெறுப்புடனும் கடிதம் எழுதுவதைக் கண்டு தபால் அதிகாரிகள் உள்பட வருந்தாமலிருக்க முடியாது. தபால் இலாகாவிலுள்ளவர்களே, அநேகம் பேர் நமது மூலிகை மணியில் சந்தா சேர்ந்து இருக்கிறார்கள். இவர்களுக்கும் சிலசமயம் புத்தகம் போய் சேர்வதில்லை என்ற புகார்கள் வருகின்றன.

வேலூரைப் பொறுத்தவரை தபால் அதிகாரிகளுக்கு இதுவிஷயத்தைச் சொல்லி தக்க நடவடிக்கை எடுத்து எம்மோடு ஒத்துழைத்து உதவிகளைச் செய்துதான் வருகிறார்கள். என்றாலும் தபால் புகார்கள் கணிசமான அளவுக்கு குறைந்தபாடில்லை. தபால் இலாகாவில் உயர்மட்டத்திலிருக்கும் அதிகாரிகளும் இது கண்டு மிகவும் கவலை தெரிவிக்கின்றனர். அதைத்தான் அவர்கள் செய்யமுடியுமே தவிர இழந்த நஷ்டத்தை ஈடு செய்யவோ அல்லது பத்திரிகைகளுக்கு ஏற்படும் அவநம்பிக்கையையோ, கெட்ட பெயர்களையோ ஈடு செய்யமுடியாது. அத்துடன் பொதுமக்களின் நம்பிக்கையையும் அதே சமயம் இழந்துவிடும் வாய்ப்பும் உண்டாகிறது. எனவே உண்மையான, நாணயமுள்ள, தபால் சிப்பந்திகளை தேர்ந்தெடுப்பதில் கண்டிப்பும் கவனமும் செலுத்தி இம்மாதிரியான தபால்வழி நேரும் கஷ்ட நஷ்டங்களை தவிர்க்க ஆவன செய்ய வாசக அன்பர்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறோம்.

முக்கிய அறிவிப்பு.

மூலிகைகளின் அருமை பெருமைகளை நமது மூலிகைமணி ஆசிரியர் அவர்கள் பல ஆண்டுகளாக தினமணி சுடரில் எழுதி வந்துள்ளதை யாவரும் அறிந்த விஷயமே. இதுபோன்ற மாபெரும் சக்தியையும் அதனை வெளியிடும் வாய்ப்பையும் அளித்த எம்பெருமான் எல்லாம் வல்ல முருகப் பெருமானுக்கு பல ஆண்டுகளாக ஆசிரியர் அவர்கள் திருத்தணிகை சென்று, ஒவ்வொரு 'சித்ரா பௌர்ணமிக்கும்' விசேஷ அபிஷேகமும், உற்சவமும் செய்து வருவது பல வாசக அன்பர்களுக்குத் தெரியும்.

அதுபோல் வரும் பராபவ சித்திரை மாதம் பௌர்ணமிக்கும் விழா எடுத்து பவரோக வைத்தியநாதனும் தணிகாசல முருகனுக்கு அபிஷேகம் செய்யப் போகிறபடியால் மூலிகை மணி வாசக அன்பர்களும், சந்தாதாரர்களும், ஆசிரியர் அவர்களிடம் மருத்துவ ஆலோசனையும் மருந்துகளையும் பெற்று குணமான அன்பர்களும் இந்த "**சித்ரா பௌர்ணமி விழாவில்**" கலந்துக்கொண்டு முருகப் பெருமானின் திருவருள் பெற்று நோயற்ற ஆரோக்கிய வாழ்வை பெற்று பேரின்பம்பெற அழைக்கிறோம். விழா தேதி அடுத்த பங்குனி இதழில் வெளியிடப்படும்.

இங்ஙனம்,

மானேஜர், **மூலிகை மணி.**

நம் நாட்டு மூலிகைகள்

★ மந்தாரை ★

மந்தாரை என்ற மரத்தின் மனைவி வன்னி! என்னடா? மரங்களுக்கும் உறவைத் தேடி வைக்கிறாரே; என நினைக்கிறீர்களா? ஆம்! இந்தக் கணவன் மனைவி உறவு இன்று நேற்றல்ல, யுக யுகாந்திரமாகி விட்டது. வேம்பும் அரச மரமும் ஒன்றுசேர்ந்த இடம் தெய்வீகத் தன்மை வாய்ந்தது போல, இந்தக் கணவன் மனைவி உறவு கொண்ட விருட்சங்களை பல சிவ ஸ்தலங்களில் காணலாம்.

பிறவி என்பதே ஆன்மாவுக்கு ஒரு சட்டைபோல, நமது சட்டை கிழிந்து விட்டால் வீசி எறிந்து விடுகிறோம் அல்லவா? அதுபோல ஆன்மாவும் உடம்பு என்ற சட்டை கிழிந்த பின்னர் வேறு ஒரு புதிய சட்டையை (உடலை) நாடி செல்லுகிறது. இப்படி பிறவி தோறும் செய்த வினைகளுக்கு ஏற்ப மறு பிறவி வாய்க்கும். மரமாகி இருந்த ஆன்மா மனிதராகலாம், மனிதராகி இருந்த ஆன்மாக்கள் கல்லாகி, புல்லாகி, பறவை, பாம்பு, புழுக்கள் போன்ற பல பிறவி ஆகிவிடுவது, அவைகளின் பூர்வ கர்மாக்களின் நற்செயல், தீச்செயல்களைப் பொருத்தவையாகும். இங்ஙனமே முனிவர் கூட்டத்திலிருந்த சதி-பதிகளான சமி என்பவளும் மந்தாரன் என்பவனும் ஒருசமயம் புருசண்டி என்ற முனிவர் உடலுருவத்தைக் கண்டு ஏளனம் செய்து; கைகொட்டி எள்ளி நகையாடினர். அம்முனிவருக்கு வந்த கோபத்தில் இருவரையும் மரங்களாகிவிட சபித்தார்! இந்த சாபத்தை பிரம்மா - விஷ்ணு - ஈஸ்வரன் மற்றும் யாராலும் நிவர்த்திக்க முடியாமல் போகவே, இறுதியாக கணேசர் முன்வந்து அவர்களுக்கு அருள் செய்து இவர்களை மீண்டும் பிறவி எய்தாமல் தன்னுடன் ஐக்கியம் செய்து கொண்டதாக புராண வரலாறு. (வினாயக புராணம் பார்க்க)

பஞ்சதருக்களில் மந்தாரையும் ஒன்று என்பதனை நமது கட்டுரையை தொடரும் அன்பர்கள் அறிந்த ஒன்று. இந்த மந்தாரை விருட்சத்தைப் பற்றிய விளக்கமும், அதன் மருத்துவப் பயன்களையும் இந்த கட்டுரையில் காணலாம்.

மந்தாரை விருட்சத்தில் பல விதமுண்டு, வெள்ளை பூவையுடையது கொக்கு மந்தாரை என்றும், சிவப்பு நிறமுடையது சிவப்பு மந்தாரை, மஞ்சள் நிறமுடையது அந்தி மந்தாரை, காட்டு மந்தாரை என்றும் கொடிமந்தாரை இது பெரும்பாலும் காடுகளில் பயிராகி இதனிலைகள் சாப் பிடவும், மற்றும் பண்டங்களைக் கட்டி அனுப்பவும் சேகரித்து நகரங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன் இலையை வாங்கி சாப்பாட்டு இலை தைத்து ஜீவனம் செய்வது நமது நாட்டு வழக்கம். ஆனால் இங்கு குறிப்பிட்டது நாடுகளிலும் நகரங்களிலும் வளர்ந்து வரும் நடுத்தர மர வகுப்பைச்சேர்ந்த மந்தாரை இனங்களாகும். வெள்ளை, சிகப்பு, மஞ்சள் ஆகிய நிறமுடைய பூக்கள் சுமார் ஒரு ரோஜா மலர் போன்று; ஆனால் முழுவதும் மலராமல் சிறிது குவிந்தபடியே கீழ்நோக்கி இருக்கும். இதன் இலைகள் நாம் பரிமாறி சாப்பிடுகிறோமே பெரிய மந்தாரை இலை அதுபோல; ஆனால் ஒன்று முதல் இரண்டங்குல நீள அகலமும், இலை மிருது தன்மையும் உடையனதாக இருக்கும். பொதுவாக இவைகளின் மருத்துவ குணங்கள் ஏறத்தாழ ஒன்றுபோலவே இருக்கும்.

உபயோகமும், மருத்துவப் பயனும்

மந்தாரை இலை, பூ, பட்டை, வேர் ஆகியவைகள் மருந்தாக பயன் படுகிறது. இலை, பூ, வேர், ஆகியவைகள் செரிப்புண்டாக்கும். மலமிளக் கும், வாந்தியை நிறுத்தும். இதன் மரப்பட்டை உடலைத் தேற்றும். உடல் உரம் பெறச் செய்து, பலத்தைக் கொடுக்க கூடியது. பட்டை பூச்சி கொல்லி, கிருமி நாசினி செய்கை உடையதாகும்.

இலை.

இலையுடன் இஞ்சி, கொத்துமல்லி, உளுத்தம்பருப்பு, சிறிது பழம்புளி சேர்த்து அளவுடன் உப்பு மிளகாயும் சேர்த்து வதக்கி துவையல் போலச் செய்து அரைத்து பகல் சோற்றில் கலந்து முதலிரண்டு பிடி சாப்பிட்டுவர உணவு மணம் பெறும். துவையல் நல்ல கருவேப்பிலை வாசனையுடன் இருக்கும். நாள்பட்ட வாய்க் குமட்டல், நீரூறல் வாந்தி, அஜீரணம் முதலியவை நீங்கி நல்ல பசி உண்டாக்கும். மந்தம் நீங்கி உற்சாகம் ஏற்படும். மந்தாரை இலையை சமையலில் சேர்ப்பது நமது பழங்கால உணவு முறைகளில் ஒன்று. இன்னும் சிலர் பழக்கத்திலே கைகொண்டு வருகின்றனர்.

இதன் இலையை உலர்த்தி இடித்து தூள் செய்து வைத்துக்கொண்டு ஓயாத வாந்தி, குமட்டல், நாள்பட்ட அரோசிகம், பெண்களுக்கு காணும் மசக்கை வியாதிகளில் இரண்டு சிட்டிகை தூளை தேனுடன் குழைத்துச் சாப்பிட அவை நீங்குவதுடன் பசியும் உண்டாகும். பொதுவாக இலையின் சிறப்பு குணம் யாதெனில் உணவு குழலில் சென்ற ஆகாரத்தை மீண்டும் வெளியே கொண்டு வராமல் தடுக்கும் சக்தி கொண்டது.

விநாயகருக்குரிய அர்ச்சனைப் பத்ரங்களில் மந்தாரை இலையும் ஒன்று பக்தர்களின் இஷ்டகாமிய பூர்த்தியும் கணேசன் அருளும் உண்டாக மந்தாரை இலையால் அர்ச்சனை செய்வது நன்மை தரும்.

மலர்.

மந்தாரை மலர்களில் வெள்ளை நிறமும், சிகப்பு நிறமும் மருத்துவச் சிறப்புடையதாகும். அன்றியும் இந்த மலர் ராஜவசியம் செய்யும் தன்மையுடையது. கண்களுக்கு குளிர்ச்சியையும், ஒளியையும் தரும். மந்தாரைப்பூ, பொன்னாங்கண்ணி இவைகளை சமமாக எடுத்து அரைத்து நல்லெண்ணையுடன் கலந்து முறிய காய்ச்சி தலைக்கு தடவிவர கண்ரோகம் நீங்கும். கண் எரிச்சல், பார்வை மங்கல் யாவும் குணமாகும்.

சகல உதிரப் போக்கும் நிற்க

மந்தாரை மலர் மொக்குகளை சேகரித்து இரண்டு பலம் எடுத்து சிதைத்து இரண்டு குவளை நீரில் கலந்து காய்ச்சி 1 குவளையாக்கி காலை மாலை இரண்டு வேளை குடித்துவர, பெரும்பாடு ரத்தப்போக்கு, இரத்த மூலம், சிறுநீர் தாரையில் ரணமாகி ரத்தமாகவே போகும் ரத்தவெட்டை, சீதபேதி, ரத்தபேதி மூக்கில் ரத்தம் வருதல், ரத்த வாந்தி ஆகியவைகள் நிற்கும். இதற்கு சிவப்பு பூ மிகவும் பயனுடையதாகும்.

மலச்சிக்கலுக்கு

இதன் பூவை நிறைய சேகரித்து உலர்த்தி இடித்து செம்பரத்தைப் பூ போலவே தூள்செய்து சர்க்கரையுடன் கலந்து இரண்டு சிட்டிகையளவு தேனில் குழைத்து உண்ண மலத்தை இளக்கி வெளியே தள்ளும். நாள்பட்ட மலச்சிக்கலுக்கு தொடர்ந்து 20, 40 நாள் சாப்பிட்டு வரலாம்.

பட்டையின் பலன்

(1) மந்தாரை மரத்தின் பட்டையை 1 பலம் எடுத்து இடித்து ஒரு குவளை தண்ணீரில் கஷாயமிட்டு அரை குவளையாக்கி குடிக்க அசீரண பேதி, உஷ்ண பேதிகள் நிற்கும். (2) இதே கஷாயத்தில் புண்புரைகளை யும், அழுகி துர்நாற்றம் எடுக்கும் ரணங்களையும் கழுவிவர அவை ஆறும். (3) ஷை பட்டை, சுக்கு, சாம்பிராணி இவைகளை சமமாக அறைத்து கழுத்தைச் சுற்றிவரும் கண்டமாலை கட்டிகள், அக்குள் தொடை இடுக்கு களில் வரும் ரத்தக் கட்டிகளுக்கு பூசிவைக்க அவை நீங்கும். (4) மந்தாரை மரப்பட்டை மாதுளம்பூ கருவேலம்பட்டை இவைகளை சமமாக எடுத்து சிதைத்து கஷாயமிட்டு அந்த நீரை வாய் கொப்பளித்துவர வாய்நாற்றம், பல் தொந்தரவுகள், டான்சில் வீக்கம், தொண்டைப் புண், வாய் நீருரல் ஆகியவைகள் எளிதில் குணமாகிவிடும்.

வேர்.

மந்தாரை - மாந்திரீக உச்சாடனத்திற்கு மிகவும் முக்கியமானது. குறிப்பிட்ட திதி, நக்ஷத்திரத்திலும், வாரங்களில் இதன் வடக்கு வேரை (அதர்வண முறைப்படி) வாங்கி மாந்திரீக உச்சாடனம் செய்து இதன் இஷ்ட தேவதையை வசமாக்கிக் கொண்டு பற்பல வேடிக்கைகளை காண்பித்து பிழைப்போரும் நமது நாட்டில் உண்டு.

சகலவித கட்டிகள் உடைய

(1) மந்தாரை பட்டை, பூ, வேர் இவைகளை சரிஎடை எடுத்து காடி அல்லது கழுநீர் விட்டு அறைத்து பழுத்து உடையாத கட்டிகள்மீது வைத்து கட்டிவர அவை பழுத்து உடைந்து ஆறும். (2) உடல் பருத்து ஊளைச் சதையுடையவர்கள் வேரை 1 பலம் அறைத்து தினமும் கஷாய மிட்டு குடித்துவர தேவையற்ற சரீரம் கறைந்து மெலிந்து வருவதைக் காணலாம். (3) நாள்பட்ட குன்மம் வயிற்றுவலி ஆகியவைகளுக்கும் இதன் வேர் கஷாயம் துணைமருந்தாகும்.

மந்தாரை புல்லுருவி

மந்தாரை மரத்தில் புல்லுருவி முளைப்பதுண்டு. இந்த புல்லுருவியை ஆயில்யம் அல்லது உத்திராட நக்ஷத்திரம் ஞாயிற்றுக்கிழமை கூடிய தினங்களில் அனுஷ்டானத்துடன் எடுத்து ரக்ஷை தரிக்க ராஜவசியமும் சர்வஜன ஆக்கர்ணமும் உண்டாகும் என்பது சித்தர் உரைவிளக்கம் கூறுகிறது.

மந்தாரை மரம் பொதுவாக நம் நாட்டு வழக்கில் பூஜைக்கும், உணவு மருத்துவமாகவும், மாந்திரீக செய்கைகளுக்கும் பயன்பட்டு வந்திருக்கிறது என்பதனை பழங்கால நாட்டு வைத்தியர்கள் நன்கு உணர்வார்கள்.

மந்தாரை பத்திரத்தாலும் மலர்களாலும் இறைவனை நாள்தோறும் அர்ச்சித்து பூசை செய்துவர வறுமை, பிணி, கவலையெல்லாம் நீங்கி மன அமைதியும், வசீகரமும், மகிழ்ச்சியான வாழ்க்கையும் உண்டாகும் என்பதில் ஐயமே இல்லை. 1 மண்டலம் செய்து பலனை பிறருக்கும் உபதேசம் செய்யுங்கள்.

மந்தாரப் பூகுளிர்ச்சி மன்னர் வசியமுமாம்
செந்தாமரைத் திருவே! செப்பக்கேள் - மந்தாரங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காணுங்கொதிப்பகற்றும்
மண்ணில் நறும் பூவென எண். [கு. மு.]

(முற்றும்)

அடுத்த இதழில்

"ஆகாச கருடன்"

வேலூர் செய்திகள்

தைப் பூச விழா!

வேலூர் ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தில் தைப்பூசம் பெருவிழா மூன்று நாள் கொண்டாடப்பட்டது. 4—2—'66 காலை 6-மணிக்கு வள்ளலார் வழிபாடு ஜோதி தரிசனமும் காண்பிக்கப்பட்டது. பின்னர், அருள்மொழிய.ரசு. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அருட்பாவில் நினைந்து நினைந்து என்ற பாடலுக்கு விரிவுரையாற்றினர். திரளான மக்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

புதுமனை புகு விழா!

வேலூர் பிரபல மர தொட்டி வியாபாரம் பந்தல் கண்ட்ராக்டரும் நமது 'மூலிகை மணி' சந்தாதாரரும், ஸ்ரீ சண் முகனடியார் சங்கத் தலைவருமான உயர்திரு. ஜி. பாலசுந்தர முதலியார் அவர்கள் 4-2-'66 அதிகாலை வேலூர் கிருஷ்ண நகரில் புதியதாக கட்டப்பட்ட தனது இல்லத்தில் பிரவேசம் செய்தார். அதுசமயம் வேலூர் எம். எல். ஏ. திரு. ஜீவரத்தின முதலியார் மற்றும் நகரப் பிரமுகர்களும் விழாவில் கலந்துகொண்டனர். காலை 5-மணிக்கு ஸ்ரீ வாரியார் சுவாமிகள் சொற்பொழிவும் நடந்தபடியால் இந்த விழாவுக்கு திரளான மக்கள் வந்திருந்தனர்.

வார இதழ் வெளியீட்டு விழா!

தமிழரசு கழக செயலாளர் திரு. வி. கே. குப்புசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட "வெற்றி வேல்" என்ற வார இதழ் தமிழரசு கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி வேலூர் சங்கீத சபாவில் 4—2—66 அன்று நடைபெற்றது. வேலூர் நகரசபைத்தலைவர் திரு. மா. பா. சாரதி அவர்கள் வக்கீல் திரு. வ. சி. சதாசிவன், திரு. வி. கே. கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் பிரமுகர்கள், மற்றும் நகரசபை அங்கத்தினர்களும், பொதுமக்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

[இந்தப் பகுதியில் வாசக அன்பர்கள் தங்களின் வினுக்களை தாராளமாக எழுதி அனுப்பலாம். கூடுமானவரை பலருக்கும் பயன்தரும் கேள்விகளே முதலிடம் பெறும். ரகசிய கேள்விகளை குறிப்பிடும் அன்பர்கள் பெயரைக் குறிப்பிடமாட்டாது. கேள்விகளை எழுதும்போது தெளிவாகவும் முழு விலாசமும், வயதும் குறிப்பிட வேண்டும்.

கேள்வி: எனக்கு 3 ஆண்டுகளாக மார்கழி மாதத்திலிருந்து ஆடி மாதம் வரையில் குதிக் கால்களில் வெடிப்பு ஏற்பட்டு நடக்க முடியாமல் அவதிப் படுகிறேன். பல மருந்துகளைப் போட்டும் ஊசி மருந்துகளை உடலில் ஏற்றியும் குணம் ஏற்படவில்லை, உரிய மருந்தை தெரிவிக்கக் கோறுகிறேன்.

பதில்: குறிப்பிட்ட பருவ காலத்தில் தோன்றும் நோய்கள் நீடித்த விஷத் தன்மையுடையதாக இருக்கக்கூடும். 1 பலம் மிளகு, வேம்பு மரப்பட்டை 2 பலம், நெய்ச்சட்டிக்கீரை உலர்த்தியது 2 பலம், சருஞ்சீரகம் கால் பலம் ஆக தனித் தனியே இடித்து வஸ்திரகாயம் செய்து ஒரு புட்டியில் பத்திரப் படுத்திக்கொண்டு தினம் காலே மாலே இரண்டு சிட்டிகை அளவு எடுத்து சுத்தமான தேனில் குழைத்து

1 மண்டலம் சாப்பிடவும். காலில் வெடிப்பு ஏற்பட்டு ரணமான இடங்களில் அழவண இலே, மஞ்சள், வேம்பு இலே இவைகளேச் சேர்த்து அரைத்து தடவி வரவும் மீண்டும் வந்து அவதிபட வேண்டிய நிலே வராது.

கே - மனதை ஒருநிலேப் படுத்துவது எங்ஙனம்? என் வயது 20 மனம் அமைதியை இழந்து தவிக்கிறேன். 11-ம் வகுப்பில் வாசிக்கிறேன். தயவு செய்து பதில் கூறுங்கள்.

ப - வயதை கவனித்தால் படிப்பு குறைவுதான், இந்த வயதில் குடும்ப பாரத்தை (தற்கால போக்குபடி) ஏற்கவேண்டிய நீ மன அமைதியை இழந்த காரணம் என்ன? மனதை நிலேப்படுத்த கட்டுப்பாடு அவசியம். அந்த கட்டுப்பாட்டை தனக்குத் தானே போட்டுக்கொண்டால் தான் மனம் அடங்கும். மனம் ஒன்றை விரும்பும்போது கட்டுப்பாடு அதை தடை செய்கிறது. விரும்பும் முன்பு அது தேவையா? அவசியம்தானு? எளிதானதா? தீங்கற்றதா? என்று பலதடவை சிந்தித்து வேண்டியவைகளேப் பெற்று, வேண்டாதவைகளேத் தள்ளி உடனே அவைகளே மறந்துவிட வேண்டும். தீமை பயப்பவைகளே அது எவ்வளவுதான் லாபகரமானதாக இருந்தாலும் கூட, மனதுக்கு ஒரு கட்டுப்பாட்டை விதித்து அவைகளேப் பார்க்கவோ; நினேக்கவோ; செயல்படுத்தவோ கூடாது. உனது வாழக்கையில் இந்த இளமை வயதில் பல குற்றங்களே செய்து இருக்கிருய், அதனுல்தான் மனம் அமைதியை இழந்து தவிக்கிறது. 15 வயது பையன் 11-ம் வகுப்பு முதலாவதாக தேறுகிருன். படிப்பில் கவனம் செலுத்தாது எத்தனே ஆண்டு படித்தாலும் பயனில்லே. எனவே, உனது தேவைகளேக் குறைத்துக்கொள். நிறைய தோழர்கள் இருப்பின் இரண்டொரு நல்ல நண்பர்களே மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு பள்ளி படிப்பை கவனி. வீணுக காலத்தைப் போக்கி அரட்டை அடிப்பவர்களோடு சேராதே! பள்ளிப் பாடங்களேத் தவிர பொழுதுபோக்கு பத்திரிகைகள், கண்ட ஆபாசக் குப்பை, காதல் கதை, திரைப்படங்கள் ஆகியவை பார்க்கப் பழகியிருந்தால் மனதார வெறுத்துவிடு. புகைப் பழக்கம் உண்டா? இதையும் வெட்டென மறந்துவிடவேண்டும். பிறகு மனதை ஒருநிலேப்

படுத்தக் கேள். பெரியவர்களிடம் வணங்கி நடந்து சந்தோஷத்தை உண்டுபண்ணு. மனம் அமைதிபெற பிறர் கஷ்டத்தை காது கொடுத்து கேள, முடிந்தால் உதவி செய். தினம் காலை மாலை குறிப்பிட்ட நேரத்தில் இறைவன் திருநாமத்தை உள்ளத்தில் ஒருமனதுடன் சில நிமிடங்களாவது உருகி நினைந்து வழிபடு. மன அமைதி உன்னைத் தேடிவரும். ஆனால் அமைதியை நீ தேடிக்கொண்டு அலையாதே.

கே - பனிகாலத்தில் உடம்பெல்லாம் (சாம்பல் நிற பூசணிக்காய் போல) வெண்மையான மாசு படிகிறது. வெய்யில் காலத்தில் பூராவும் நீங்கிவிடுகிறது. மீண்டும் பனிகாலம் வந்தால் மீண்டும் பழைய பல்லவி தான்! இதற்கு இங்கிலீஷ் வைத்தியத்தில் பல டாக்டரிடம் காட்டினேன், பணம்தான் கரைந்தது. நோய் கரையவில்லை. இதற்கு தாங்கள் ஒரு நல்ல முறையைக் கூறுங்கள்.

ப - மேகநீர் சம்மந்தப்பட்ட நோய் உமது உடம்பில் நாள்பட்டு விட்டதால் ஆழ்ந்து வியாபித்து சர்மத்தின்மேல் விளையாடுகிறது. காபி, தேயிலை, புகையிலைகளை விட்டு ஆவாரைப் பட்டை, பரங்கிச் சக்கை சமமாக எடுத்துலர்த்தி இடித்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு தினமும் மூன்று சிட்டிகை அளவு எடுத்து 90 நாளைக்கு சாப்பிட்டுவரவும் அத்துடன் ஆவாரம்பூவை தினமும் கஷாயமிட்டு பால் கற்கண்டு சேர்த்து இரண்டுவேளை சாப்பிடவும். இதிலும் குணமாகவில்லை எனில் எமது பரம்பரை மகா மூலிகை எண்ணையை பத்தியமுடனிருந்து சாப்பிட குணமாகிவிடும்.

கே - எனது அண்ணன் மகளுக்கு வயது 14. கீழ் உதட்டினுள் பாகத்தில் வெண்மை படர்ந்திருக்கிறது. எங்களுக்கு இந்த வெண்மைகுறி கவலையைத் தருகிறது. இதற்குத் தாங்கள் ஆலோசனை தந்து ஆதரிப்பீர்கள் என நம்புகிறேன்.

ப - கவலை படவேண்டாம். இரவு நேரத்தில் புழுங்கலரிசி சோற்றில் நீர் விட்டு அதில் நாலு வில்வ இலையை புதிதாகப் பறித்துப் போட்டு மூடி வைத்திருந்து காலையில் இலையை எடுத்து போட்டுவிட்டு அந்தபடியே சோற்றை சிறிது உப்பு கலந்து சாப்பிட செய்யவும். இலை தினமும் பச்சையாகவே கொண்டு வரவேண்டும். பத்தியம் மிஷினில்

அரைத்த மிளகாய் தூள் கூடாது. காபி, டீ, கடுகு, கடலை எண்ணெ, நல்லெண்ணெ கூடாது. லகுவாக மிளகு, சீரகம், பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி, கருவேப்பிலை, மோர், பால், நெய் முதலியவைகளை மட்டும் சேர்க்க. இப்படி 40 நாள் முதல் 120 நாள் தொடர்ந்து செய்ய மேல் குறிப்பிட்ட நோய் விலகிவிடும்.

கே - எனக்கு வயது 18. நான் இப்பொழுது இருக்கும் உயரம் 5' 1''. நான் ஒரு வேலைக்கு செல்லவேண்டும் என்றால் 5' 6'' உயரம் வேண்டியுள்ளது. ஆகவே தாங்கள் தயவு செய்து இன்னும் 5 அங்குலம் வளர ஒரு யோசனை சொல்லுங்கள். ''உயரமாக வளருங்கள்'' என்று செய்யும் விளம்பரத்தைக் கண்டு பணம் கொடுத்து வாங்கிச் சாப்பிட்டும் பயனில்லை.

ப - இளவயது ஆனாலும் 5 அங்குலம் ஒரேயடியாக வளர்வது என்பது அசாத்தியமே. "ஆனாலும் முயற்சி மெய்வருந்த கூலி தரும்" என்றபடி நாள்தோறும் விடியற்காலை எழுந்து தொங்கும் ஆட்டம் (ரிங் பார்) விளையாட்டு 15 நிமிடங்கள் விட்டு விட்டு செய்யவும். உணவுடன் நெல்லி வத்தல், நெல்லி ஊறுகாய், காரட், பெங்களூர் காய் வகைகள், பசுமையான கீரை வகைகள், பால், பழங்கள் ஆகியவைகளை உணவுடன் சேர்க்கவும். தீட்டாத புழுங்கலரிசி, பருப்பு தினுசுகளும் சேர்க்கலாம். இப்படி ஆண்டு கணக்கில் தொடர்ந்து செய்வதுடன் மனதில் நாம் நிச்சயமாக உயர்ந்து வளருவோம் என்ற திடநம்பிக்கையும் வேண்டும். உயரமாக வளருவதற்கு மருந்தே இல்லை. இனி நம்ப வேண்டாம்.

கே - மண்டை ப்ீனிசத்தால் நான்கு ஆண்டுகளாக வேதனைப் படுகிறேன். அடுக்குத் தும்மல், நாசித்துவாரத்தில் இருந்து நீர் ஒழுக்கு சதா இருக்கிறது. வயது எனக்கு 35. பத்தியமிருந்து மருந்து சாப்பிட வசதி இல்லாதவன். குறைந்த சம்பளம், வேலைக்குப் போனால்தான் வயிற்றுப் பிழைப்பு. இதுவரையில் கையில் இருந்த பூர்வீக சொத்தும் காசும் ஆங்கிலமுறை வைத்தியத்தில் பிரபல டாக்டர்களுக்கு பில் கொட்டி கொடுத்தே கரைந்து போய்விட்டது. நோய் அதிகரித்ததே தவிர என்னு மூக்கு பிரமாணம் கூட குறையவில்லை. இப்போது குளிர்காலத்தில் இந்நோய் அதிகமாக கண்டு மூச்சும் திணறுகிறது. மீண்டும் அரசாங்க

கே - ஐயா, 'பஞ்சந்தாங்கி' என்பது மூலிகையா? அது எங்கே கிடைக்கும். இலை, பூ, எப்படியிருக்கும்? "இது ஒரு மூலிகை" என்று ஒரு மாதப் பத்திரிகையில் வந்தது. தயவு செய்து விளக்கம் கூறுங்கள்.

ப - உமது கேள்வி எமக்கு சிரிப்பைத்தான் வருவிக்கிறது! மூலிகை தெரியாதவர்கள் எல்லாம் மூலிகைகளைப் பற்றி விமர்சனம் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். மலைத்தாங்கி, கோபுரந்தாங்கி என்று எல்லாம் மூலிகைகள் உள்ளன. இவைகளை நேரில் காட்டினால் தவிர ஒருவருக்கும் புரியாது. ஆனால் 'பஞ்சந்தாங்கி' என்பது சிறு குழந்தைக்கும் தெரிந்த உணவு தான்யம். அதாவது கேழ்வரகுதான் பஞ்சந்தாங்கி என்பது. **"சித்ர மலர்த்தாழ் குழலே, நீடு பஞ்சந்தாங்கியெனச் சொல்லுகின்ற கேழ்வரகின் செய்தியிது கேள்"** என்ற சித்தர் பாடல் பஞ்சந்தாங்கி என்று குறிப்பிடுகின்றது. கேழ்வரகுக்கு பரிபாஷைப் பெயர் **பஞ்சந்தாங்கி.** புரிந்ததா?.

கே - நான் மிகவும் மெலிந்தும், உயரமாகவும் இருக்கிறேன். அதற்கேற்றபடி பருமனாகவும் உடல்திடத்தைப் பெறவும் எளிய வழியை அன்பு கூர்ந்து அருளுங்கள். வயது 20.

ப - வெண்பூசணி, வெங்காயம், உருளைக்கிழங்கு, உளுத்தம் பருப்பு, கொண்டை கடலை, (முழு கடலை) நெய், உலர்ந்தப் பழங்கள், பருப்பு கொட்டை தினுசுகளை நிறைய சாப்பிட பழகி வரவும். சதைப் பற்றுதல் உண்டாகும்.

கே - எனது நெற்றியில் மொசு மொசு என ரோமம் வளர்கிறது. இதைத் தடுக்க ஏதாவதொரு மார்க்கம் உண்டா?

ப - உண்டு. குப்பைமேனி இலை, வேப்பங்கொத்து, விராலி மஞ்சள், சமமாக சேர்த்து அரைத்துக்கொண்டு இரவு படுக்கைக்குப் போகும்போது நெற்றியில் பற்று போட்டு வரவும். இப்படி தொடர்ந்து செய்ய ரோமம் முளைப்பது அற்றுப்போகும்.

கே - மூலிகை என்று போலி மாதப் பத்திரிகைகள் வர ஆரம்பித்து விட்டனவே! அது குறித்து உங்கள் கருத்து என்ன?

ப - இதுபற்றி எனது கருத்தை மூலிகை மணி செப்டம்பர், 65 ஆவணி மாதம் தலையங்கத்தில் மூலிகை சகாப்தம் என்ற தலைப்பில் தீட்டியுள்ளது. மக்கள் மூலிகைகளின் பேரில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை அறிந்த பத்திரிகை உலகம், இன்று மூலிகைகளை விமர்சனம் செய்ய முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய விஷயமே! ஆனால் தற்காலம் நேயர் கேட்கும் கேள்விகளுக்கு, **தத்து பித்து என்று உளறிக் கொட்டி வைத்து ஒன்று கிடக்க ஒன்றைச் சொல்லி பச்சிலைகளின் மேலுள்ள பாசத்தை பகையாக்கி விடுகிருர்கள்.** உதாரணமாக இந்த புத்தகத்தில் 23-ம் பக்கத்தில் ஒரு அன்பர் ‘, பஞ்சந்தாங்கி என்பது ஓர்வித மூலிகை” என்று ஒரு பத்திரிகையில் படித்தாராம்! மூலிகைப் பற்றி விமர்சனம் செய்வோர் பரம்பரை வழி வந்தவர்களாகவும் சிறிதளவாவது அனுபவ ஞானம் பெற்றவராகவும் இருத்தல்வேண்டும் இப்படிப்பட்டவர்கள் பல பத்திரிகைகள் ஆரம்பித்து வெளிவந்தால், நமது நாட்டிலிருந்து ஆங்கில மருத்துவத்தை விரைவில் விரட்டிவிடலாம். ஆனால் அனுபவமில்லாமல் பத்திரிகை விற்கவேண்டும் என்ற லாபநோக்கத்துடன் தற்காலம் போலிகள் கிளம்பியிருப்பது, நமது நாடு செய்த துர்பாக்கியம்! அதுமட்டுமல்ல, இங்கிலீஷ் மருந்து விற்பனை செய்யும் கம்பெனிகள்கூட இரண்டு பச்சிலையையும், பூவையும் போட்டு மருந்துகளை விற்பனை செய்கிறது. போலிகளை மக்கள் நன்கு ஆய்ந்து களைதல் வேண்டும். போலி என்பது இன்று நேற்று வரவில்லை! மூலிகைகளில்கூட போலிகள் உள்ளது. உத்தாமணி குப்பைமேனி போலவே சில மூலிகைகள் வளர்கின்றன. எனவே, போலிகள் எவை? உண்மை மூலிகை எவை என்பதை அனுபவப்பட்டவர்களைக் கேட்டு தெரிந்து கொள்ளவேண்டும். போலி மூலிகைகள் யாவும் விஸ்வாமித்திரர் சிருஷ்டி என்று நமது நாட்டில் கூறுவது வழக்கம். போலிகள் இருப்பதால்தான் உண்மை வஸ்துக்கு பெருமை என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

உ

ஸ்ரீ ராஜ பூஜித மகான் ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் திவ்ய சரிதம்.

ஸ்ரீ கே. எஸ். வி. ரமணி அவர்கள் எழுதிய புத்தகம், விலை ரூ. 2-00

கிடைக்குமிடம்: ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் சத்சங்கம்,

357, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-14.

முருகா.

"இறவாதிருக்கும் வழி"

மரணம் என்பது பெரிய வேதனை. மரண வேதனை என்று கூறுவர். சாதலின் இன்னாத தில்லை என்கின்றார் திருவள்ளுவர்.

மரணத்தைக் கண்டு அஞ்சாதவர் யார்? ஒருவருமில்லை.

ஒரு கிழவன்; நான்கு பிள்ளைகளுக்குத் தந்தை. பிள்ளைகள் அக் கிழவனைக் காப்பாற்றாமல் விரட்டி விட்டார்கள். பாவம்! தொண்டு கிழவன் விறகு வெட்டி பிழைக்கலானான்.

ஒருநாள் விறகுச்சுமையைச் சுமக்க மாட்டாது கொடிய வெய்யி லில் வாடி வருந்தினான். சுமையைச் சுமைதாங்கி மேல் இறக்கினான்.

"பாவி எமனே! உனக்கு புத்தி இல்லையா? என் ஓலை செல்ல ரித்து விட்டதா? என்னை ஏன் பூமிக்குப் பாரமாய் வைத்திருக்கிறாய்?" என்று கண்ணீர் வடித்தான். அவனுக்கு முன் ஒரு பயங்கர உருவம் வந்து நின்றது. கரிய உடம்பும், பெரிய மீசையும், கனல் பொறி சிந்துங் கண்களும் உடைய அவ்வுருவைக் கண்டு கிழவன் நடுங்கிவிட்டான்.

"நீ யார்?"

"நான்தான் யமன். என்னை ஏன் அழைத்தாய்?

"அப்பா! நீதான் யமனா? ஒன்றுமில்லை. நான்கு மக்களைப் பெற் றேன். ஒரு பிள்ளையும் எனக்கு உதவவில்லை. இந்த விறகுச் சுமையைத் தூக்கி என் தலையில் வைக்குமாறு அழைத்தேன்."

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

அந்த உருவம், ஹ் ஹா...... ஹ் ஹா...... என்று சிரித்து விட்டு மறைந்தது.

கிழவன் உண்மையில் இயமனைக் கண்டவுடன் சாவுக்கு அஞ்சி அப்படிக் கூறினான். ஆதலால் யாரும் சாவுக்கு அஞ்சுவார்கள்.

இத்தகைய கொடுமையானது இறப்பு. இறவாமல் இருக்க வழி இருக்கிறது. அதை இப்போது தெளிவாகக் கூறுகிறேன்.

நாம் எங்கு சென்றாலும் நமது உடம்பின்படி நிழல் நம்மைத் தொடர்ந்து வருகிறது. நாம் தலையை அசைத்தால், நிழலும் தலையை அசைக்கிறது. சென்றால் தொடருகிறது. அந்த நிழலை நிறுத்த முடியுமா ? முடியும். எப்படி ?

நாம் ஒரு மரத்தின் நிழலை அடைந்தால் உடலின் நிழல் நிற்கும்.

அதுபோல், நாம் இறைவன் திருவடி நிழலை அடைந்தால் பிறவி நிழல் நின்றுவிடும். மறுபடியும் பிறப்பு வராது. ஆகவே பிறவாமையைப் பெற்றால் இறவாமை தானே சித்திக்கும். பிறந்தால் இறக்க வேணும். பிறக்கவில்லையானால், இறக்க வேண்டி வராது.

ஆதலால் இறவாமல் இருக்க வழி பிறவாமையாகும். அதனால் பெரியவர்கள், பிறவாமையை இறைவனிடம் வேண்டினார்கள்,

" பிறவாமை வேண்டும் " என்கின்றார் காரைக்காலம்மையார்.

" பிறவாதிருக்க வரந்தரல் வேண்டும் " என்கின்றார் பட்டினத்து சுவாமிகள்.

" ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே " என்கின்றார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

" இனி பிறவாது நீயருள் தருவாயே " என்கின்றார் அருணகிரி நாதர்.

எனவே இறவாதிருக்க வேண்டுமானால் இப்பொழுதிருந்தே ஆண்டவனிடம் பிறவாதிருக்க வரம் தர வேண்டிக் கொண்டால் மறுபடி மறுபடி தோன்றி வேதனை செய்யும் மரண வேதனையினின்றும் தப்பிக்கலாம்.

ஏஜண்டு தோழர்களுக்கு.

ஒவ்வொரு தமிழ்மாதமும் இதழ் வெளிவருவதற்குமுன், முன்மாத பாக்கியை அனுப்பினால்தான் புதியஇதழ் அனுப்பப்படும். அதிக இதழ் தேவையானால் 10 நாளுக்கு முன்பே முன்பணம் அனுப்பி தேவையைக் குறிக்க வேண்டும். முன்பாக்கி வர தாமதித்தால் இதழ் அனுப்பப்பட மாட்டாது.

மானேஜர்

அகத்தியர்

க. கோவிந்த ராசன் M. A.

செந்தமிழ் மொழிக்குச் சிறந்ததோர் இலக்கணத்தைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அளித்த பெருமையை அகத்தியருக்கு அளித்து வருகின்றோம். அதனால்தான் தமிழை அகத்தியன் பயந்தசெஞ்சொல் ஆரணங்கு என்றனர். அகத்தியர் என்ற உடனே ஒரு குறுகிய வடிவந்தான் மனத்திலேயும் தோன்றுகிறது. மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது. காலத்தையும், இடத்தையும் கடந்தவர் இவர். சாதாரண மனித நிலையிலிருந்து கடவுள் நிலை வரைக்கும் தமிழ் மக்கள் இவரைக் கொண்டு சென்றிருக்கின்றனர். இவருக்குக் கோயில் சமைத்து வழிபடுகின்றனர்.

இன்று அகத்திபர் பலரைப் பற்றி கேள்விபடுகின்றோம். அகத்தியம் என்ற நூல் இயற்றிய அகத்தியர் முதற்சங்க காலத்தில் வாழ்ந்தவர். இன்று அந்த நூலில் உள்ளனவாகக் காட்டப்படும் சூத்திரங்கள் அத்துணைப் பழையன என்று பலரும் ஒப்புவதில்லை. இவரே தேவாரங்களை எல்லாம் திரட்டியிருக்க முடியுமா? அன்றி சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தை ஒட்டி வடமொழியில் அகத்தியர் பக்த விலாசம் என்ற நூலைச் செய்திருக்க முடியுமா?— என்ற வினாக்கள் எழுகின்றன. மேலும் இவர் கடல் கடந்து கடாரம் அடைந்து இதோனீஷியா சென்று, போர்னியோ குசத்தீவீபா முதலிய தீவுகளில் தங்கி இறுதியாக சயாம் அடைந்து அங்கிருந்து கம்போடியா சென்று யசோமதியாரை மணந்து வாழ்ந்திருந்ததாகவும் ஒரு செய்தி சொல்லப்படுகிறது. இதனால் ஒரு சிலர் அகத்தியரைப் பற்றி வருவன எல்லாம் புனைகதை என்று சொல்லுகின்றனர். ஆரியர் தமிழ்நாடு போந்ததையே அகத்தியர் தமிழ்நாடு போந்தார் என்று கூறுகின்றனர் என்றும் கூறுவர். இன்னுஞ்சிலர் அகத்தியர்கள் பலர் பல காலத்தில் பல இடங்களில் வாழ்ந்தனர் என்பர். அவர்தம்முள் சிலர் தமிழர் சிலர் ஆரியர் எனவும் கூறுவர்.

தமிழ் நூல்களில் தமிழ் அகத்தியரைப் பற்றிய சில குறிப்புகள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பரிபாடல் போன்ற நூல்களில் வருகின்றன. மேலும் அகத்தியரைப் பற்றி வேள்விக்குடி சின்னமனூர்ச் செப்பேட்டில் பாண்டியர் புரோகிதர் அகத்தியர் என்று ஒரு குறிப்பு வருகின்றது.

இறையனூர் அகப்பொருள் உரையிலிருந்து தலைச் சங்கத்தில் அகத்தியனூர் என்னும் புலவர் ஒருவர் இருந்தார் என்றும், அவர் செய்த நூலாகிய அகத்தியம் என்பதே அக்காலத்திய இலக்கணமாக இருந்தது என்றும் அது 12,000 சூத்திரங்களால் ஆகியது என்றும், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைப் பற்றியும் கூறுவது என்றும் அறிகின்றோம்.

உரையாசிரியர்களால் ஆங்காங்கே மேற்கோள்களாக எடுத்தாளப் படுகின்ற சில சூத்திரங்களைத் தவிர நூல் முழுமையும் கிடைத்திலது.

இடைச் சங்க காலத்தும் ஓர் அகத்தியரைக் காண்கின்றோம். இக்காலத்தும் அகத்தியமே தமிழ் மொழிக்கு இலக்கணமாக அமைந்துள்ளது. தொல் காப்பியர், அதங்கோட்டாசான், பனம்பாரனூர் முதலிய பன்னிருவரும் அகத்தியர் மாணவர் என்றும், இவர்கள் இயற்றிய நூலே பன்னிரு படலம் ஆயிற்று என்றும் புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரு படலம் என்றநூல்களின் பாயிரத்தால் அறிகின்றோம். முதற் சங்கத்திற்கும் இரண்டாஞ் சங்கத்திற்கும் இடையே பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் கழிந்துள்ளமையின் இரு சங்கங்களிலும் இருந்தவர் இரு வேறு அகத்தியர் எனக் கொள்ளுதலே அமைவுடைத்தாம்.

இவர்களைத் தவிர வேதகால அகத்தியர், பாரத கால அகத்தியர், இராமாயண கால அகத்தியர் என்று பல அகத்தியர்களைப் பற்றியும் கேள்விப் படுகிறோம். மற்றும் எத்துணையோ அகத்தியர்களைப் பற்றிக் குறிப்புகள் கந்த புராணம், காஞ்சி புராணம் என்ற புராணங்களிலும் இன்னும் பிற தல புராணங்களிலும் வருகின்றன. இமய மலையில் சிவபெருமான் இமவான் மகளாகத் தோன்றிய பார்வதி தேவியாரை மணந்தபோது வட திசையில் யாவரும் கூடியதனுல் வடதிசை தாழ்ந்து, தென்திசை உயர்ந்தது. அவ்வாறு உயர்ந்த தென்னுட்டைச் சமன் செய்ய அகத்திய முனிவரை இந்நாட்டிற்குச் சிவனூர் அனுப்பி வைத்தார் என்றும், வரும் வழியில் விந்திய மலையினை அடக்கி, விந்தம் அடக்கிய வித்தகர் எனப் பேரும் பெற்றூர் என்றும் அறிகின்றோம். கந்த புராணத்தில் அகத்தியர் விதர்ப்பர்கோன் மகளாகிய உலோபா முத்திரையை மணந்து சித்தன்

புதல்வனையும் அளித்தார் என்றும் ஒரு செய்தி சொல்லப் படுகிறது. வான்மீகி இராமாயணத்தும் அகத்தியர் பொதிய மலையில் வாழ்ந்தமை குறிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பிலிருந்து அகத்தியர் தமிழ் முனிவர் என்பதும் இராமாயண காலத்திலேயே தென்னாட்டில் பொதியமலைச்சாரலில் வாழ்ந்து தமிழ் வளர்த்து வந்தார் என்பதும் பெறப்படுகின்றன. அவர் தமிழ் அகத்தியரேயாவர், தமிழ் நாட்டவரேயாவர்.

பிற்காலத்தே பதினெண் சித்தர்களுள் ஒருசில அகத்தியரைக் காண்கின்றோம். அவர்கள் வைத்திய நூல்கள் பல இயற்றியுள்ளனர். நமது நாட்டில் பிற்காலத்தில் வந்த புலவர்கள் தாங்கள் எழுதிய நூல்களுக்கெல்லாம் தங்கள் பெயரை யிடாமல் அகத்தியர் பெயரையே இட்டனர். அதனால்தான் இன்று நூற்றுக்கு மேலான நூல்கள் அகத்தியர் இயற்றியவையாக ஓலைச் சுவடிகளாக இன்றும் அச்சிடப் பெறாமல் இருக்கின்றன. அத்தகைய நூல்களின் பல பெயர்கள் கீழ்க்கலைக் கையெழுத்துப் பிரதிநூல் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. அகத்தியர் சித்த வைத்தியம், ஆறெழுத் தந்தாதி கருப்ப சூத்திரம், வாகடம், பூசாவிதி, ரஸவாத சூத்திரம்எட்டு, அகத்தியர் ஞானம் பன்னிரெண்டு போன்ற எண்ணிறந்த நூல்கள் இருக்கின்றன. இந்த நூல்களின் தமிழ் நடையும், கூறும் பொருளும், இவற்றைப் பாடியவர்கள் புலமை மிக்கவர்கள் அல்லர் என்பதையும் காட்டுகின்றன.

சுருங்கக் கூறின் அகத்தியர் என்ற பெயருடைய தமிழ் முனிவர் ஒருவர் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்தனர். அவர் தலைச்சங்கப் புலவராக விளங்கினர். ஆனல் அந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. தொல்காப்பியர் ஆசிரியரும் அகத்தியர் ஆவார். இவர்களைத் தவிர வட நாட்டு அகத்தியர் சிலரும் இருந்தனர் எனலாம். தமிழ் நாட்டில் அகத்தியர் என்பாரே இல்லை என்றும், வட நாட்டு அகத்தியரைப் பார்த்துத் தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் அகத்தியர் ஒருசிலரைப் படைத்துக் கொண்டனர் என்றும் ஆரிய அகத்தியருக்குக் கூறப்பட்டவற்றை எல்லாம் தமிழ் அகத்தியருக்கு ஏற்றிக் கூறினர் என்றும் சிலர் கூறுவர்; இது பொருந்தாக் கூற்றாகும். குறுகிய வடிவம் கொண்டவர், கடல் நீரைக் குடித்தவர் குடத்தில் பிறந்தவர், மித்திரனுக்கும் ஊர்வசிக்கும் பிறந்தவர் போன்ற கதைகள் எல்லாம் பின்னர் எழுந்த புனைகதைகளாகும். இப் புனைகதைகளுக்கு முடி சூட்டுமாறு பல புலவர்கள் அகத்தியர் என்ற பெயரால் நூல் பல இயற்றி எல்லோரையும் மயங்க வைத்து விட்டனர்.

(க-க.)

— சென்ற மாதத் தொடர்ச்சி,

"காணாத கடி"

சில விஷ ஜந்துக்கள் கடிக்கும்போது ஒன்றும் தெரியாது. மேலும் தூக்கத்திலும் விஷக்கடியுண்டவர்களை நிதானிக்க முடியாது அல்லவா? அதனால் இவ்வகைக் கடி விஷங்களை காணாக்கடி விஷம் என்று கூறுவது நம் நாட்டின் மரபு இன்னும் சில நஞ்சு கொண்ட ஜீவன்கள் கடித்தவுடன் கண்ணில் அகப்படாமல் போய்விடும்! இன்ன ஜீவன் தான் கடித்தது என்று தெரியாது. ஆயினும் அவைகளுக்கெல்லாம் காணாக்கடி யென்று அதற்கும் சில குறி குணங்களை வரையறுக்கப்பட்டன.

குணமும், குறியும்

" காசினியில் காணாத கடியைக் கேளாய்
கண்ணாடி போலிருளில் முன்னே மின்னும்
தசையெல்லாம் பட்டையிட் டட்டை போலத்
தானிருக்கும் கடித்தவுடன் தடித்துத் தேகம்
நசிவில்லை வடுவடுவாய்ப் புறணித் தோன்றும்
நற்சிவப்பாய் தடித்துடலிற் றினவே மிஞ்சும்."

சிகிச்சை விபரம்

"மிஞ்சாமல் காடி யொரு படியிலப்பா
இதற்கிணையாய்க் கற்பூர வள்ளித்தன்னை
அஞ்சாமல் நீயறைத்துப் பாதியுண்டு
அங்கமெலாம் பரவியன்றோ துவாலை பூச
அஞ்சு நாளிருநேரம் அருந்தவேண்டும்
அரிதான பத்தியமாய் அறையுள் போடு"

கருத்து:-காணாக்கடி நஞ்சு உடம்பில் ஊறினால், அவனை இரவில் கும்பிருட்டில் காணும் போது; அக்கடியால் உண்டான தடிப்புக்கள் மின்னலைப்போல காணப்படும். சர்மத்தின் மேல் படை, படையாக பட்டை அடையாளம் தெரியும், தடிப்புண்டாகும். மரப்பட்டை போல பொருக்குகளும் கருமை, சிவப்பு, நிறங்களோடு வடுக்கள் தோன்றி அவற்றில் தினவெடுக்கும்.

இந்த நஞ்சு முறிய ஒருபடி காடியில் நாற்பது பலம் கற்பூரவள்ளி இலையை அரைத்துக் கலக்கி, அதில் பாதியை எடுத்து சிறுக சிறுக பருகி மறு பாதியை உடல் முழுமையும் பூசவேண்டும். இவ்விதம் ஐந்துநாள் இரண்டு வேளையும் செய்து கடும் பத்தியமிருந்து (உப்பு, புளி, காரம் நீக்கி இருப்பது) காற்றில் வெளியே வராதபடி வீட்டிற்குள்ளேயே இருந்து வர 1-வாரத்திற்குள் காணாக்கடி விஷம் நீங்கும்.

(விஷ ஆருடம்)

அரணை.

அரணைக்கு கடிக்க வராது. ஆனால் அது நாவின் மூலம் நக்கினால் விஷக்குணம் உண்டு. அரணை நக்கினால் வாயில் வெள்ளை நிறமான நுரை தள்ளி வரும். உடல் முழுதும் நடுக்கல் உண்டாகும். நாக்கு தடிப்பாகும், பேச்சு சரிவர வராது குழறும்.

"நக்கிடு மெனிலரணை — உடல் முற்றும்
நடுக்கு வெண் நுரை தள்ளி நாக்குதடிக்கில்
சுக்கொடு வசம்பெடுத்துச் — சுட்டுப்பின்
சூரணித் தருந்தினும் சாரணை வேர்
துவைத்ததன் சாறுடம்பிற் — பூசிறும்
தொலையும் குறுத்து பனந்தொல் வேரும்
சுவைத் தருந்திட வரணை — விடமெலாம்
துடித்தொடுங் கிடும் நாத் தடித்துப்போம்."

(1) அரணை நக்கல் விடத்திற்கு சுக்கையும் வசம்பையும் தனித் தனியாக நெருப்பிலிட்டு சுட்டு கரியாக்கி இடித்துத் தூள் செய்ததை சமமாக கலந்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளை இரண்டு சிட்டிகை குழைத்து நக்கிசாப்பிட்டுவர 6 நாளில் தீரும். மேலுக்கு தடித்த இடங்களில், சாட்டரணை வேரை இடித்து பிழிந்து சாற்றை பூசி வருவதால் அவை நீங்கும்.

(2) பனங்குருத்தையாவது குருத்து (கன்று) பனையின் வேரை யாவது வாயில் போட்டு மென்று சுவைத்து சாற்றை விழுங்கிவர அரணை நக்கல் குறிகுணம் நீங்கும்.

(தொடரும்)

எல்லாம் ஈசன் செயல்.

பூ கைலாசம் என்னும் ஊரில் ஆழ்ந்து சமாதியிலிருந்த சாது ஒருவரை அவ்வூரார் சித்திரவதை செய்து கொன்று விட்டனர். எல்லாம் ஈசன் செயல் என்கின்றீர்கள். இதை யும் ஈசன் செயல் என்பதா? சமாதியில் மனம் லயமாயிருந்த சாதுவுக்கு இத்தகைய கதியை ஈசன் ஏன் கொண்டுவந்தார் என்னும் கேள்வியை பரமஹம்சரிடம் ஒருவர் கேட்டார்.

அதற்குப் பரமஹம்சர் விடை விடுத்தார்,

வினைப்பயன் எல்லா சரீரங்களுக்கும் உண்டு. அந்த வினைப்பயன்களும் ஈசன் செயலே. தங்கபஸ்பம் செய்கின்ற வைத்தியர்கள் ஒரு மூசைக்குள் ஏதேதோ மூலிகைகளைப் போட்டுத் தங்கத் துண்டு ஒன்றையும் அதனுள் புடம்போட்டு ஊதுகின்றனர். தங்கம் உருகி மற்ற மூலிகைகளோடு கூடி தங்கபஸ்பம் ஆகிவிடுகிறது. அதன் பிறகு மூசையை ஜாக் கிறதையாக வைத்திருந்தால் என்ன? பெற வேண்டிய தங்க பஸ்பத்தைச் செய்தாகிவிட்டது. பூகைலாசத்திலிருந்த சாது பிரம்ம ஞானத்தை அடைந்துவிட்டார். அவர் உடலுக்கு அழிவு எவ்விதத்தில் வந்தால்தானென்ன? அதனால் அவ ருக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. அவர் கஷ்டப்பட்டார் என்று அறியாமையால் நாம் எண்ணுகிறோம்.

- இராமகிருஷ்ண பரஹம்சரின் உபதேசங்கள்.

உ

முருகா

இலட்சியவாதி

மு. பெருமாள்

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

தாயே உன் குழந்தை மீது இவ்வளவு வெறுப்பு ஏனம்மா? குழந்தையறியுமா உன்கஷ்டத்தை?

குழந்தைமேலும்அழத்தொடங்கியது. உடனே இலட்சியவாதி அக்குழந்தையை எடுத்தார். அழுவதின் காரணத்தை அறிய முயன்ருர். குழந்தையின் உடம்பெல்லாம் தடவிப் பார்க்கையில் வயிறு கடினமாக இருந்தது. அங்குக் கைப் பட்டதும் மேலும் துடித்து அழ முற்பட்டது. வயிற்றில் கோளாறுள்ளது என அறிந்தார்.

உடனே வேப்பங் கொழுந்தும், அதிமதுரமும், சர்க்கரையும் சேர்த்தரைத்து நெய்யில் வேக வைத்து உள்ளுக்குக் கொடுத்தார். சிறிது நேரத்தில் குழந்தை மலங்கழித்து மலக் கட்டும் நீங்கியது. மகிழ்ச்சியோடு தாயின் மடியில் ஓடி விளையாடியது.

தாயே கண்டாயோ இப்போது குழந்தையின் மகிழ்ச்சியை. இது தெரியாமல் அழுகிறதென்று குழந்தையை அடித்தாயே! சிசு, பேசும் ஆற்றல் இல்லாத குழந்தை. பெற்றவள்தானே குறிப்பால் அறிந்து கொள்ள வேண்டும்,

சுவாமி தங்கள் புத்திமதிக்கு மிக்க நன்றி. குழந்தைக்கு சிறுநீர் கட்டி விடுகிறது அடிக்கடி, என்ன செய்யலாம்?

எலிப்பிழுக்கையையும், வெள்ளரி விரையையும் சமஞக அரைத்து அடிவயிற்றில் பூசுக. வெங்காயம் பொரித்து தாய்ப்பாலில் கரைத்து கொடுக்கவும். உடனடியாக சிறுநீர் கழிந்து குணமாகும்குழந்தைக்கு

வாந்தி எடுத்தால் என்ன செய்யலாம் ?

இதற்கெல்லாம் ஆஸ்பதிரிக்கும், டாக்டரையும் தேடி அலைய வேண்டாம். மயிலிறகைச் சுட்டு சாம்பராக்கித் தேனில் குழைத்து நாக்கில் தடவவும்.

கலைக் கொம்பு, திப்பிலி, அதிவிடையம் சமனுய்ப் பொடித்து கடிகைப்பிரமாணம் தேனில்குழைத்துக் கொடுக்கலாம்.

அல்லது, கரும்பைக் கும்பியில் நுழைத்து எடுத்துச் சாறு பிழிந்து சமனளவு பன்னீர் கலந்து கொடுத்தாலும் குணமாகும்.

ஊளைச் சதை நீங்க

சிலர் மிகப் பருமனுக இருப்பார்கள். அதாவது தோற்றத்தில் யானைக் குட்டியைப் போல இருப்பார்கள். இத்தோற்றத்தை உடையவர்களின் சதை தள தளவென்று ஆடும் இவர்களால் ஓடவோ மிகவேகமாக நடக்கவோ முடியாது. இச்சதையால் இவர்களுக்கு யாதொரு பயனும் கிடையாது. இதைத்தான் ஊளைச்சதை என்பார்கள். மேலும் இவ்வூளைச் சதையுடையவர்கள், அடிக்கடி நோய் வாய்ப் படுவார்கள். ஆகையால் இத்துன்பத்திலிருந்து மீள, தினமும் காலையும், மாலையும் வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி தேனை வென்னீரில் கலந்து பருக, ஊளைச்சதை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். ஊளைச் சதை உடையவர்கள் இம் முறையைப் பரிசோதித்துப் பார்க்கலாம். (புலி)

வயிற்றுக் கழிச்சலுக்கு என்ன செய்வது ?

மாதுளம் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, மாவிலைக் கொழுந்து மூன்றையும் அரைத்துக் கொடுக்கவும்.

சிறங்கு வந்தால் என்ன செய்யலாம் ?

ஆடுதின்னுபாளைச் செடியை உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கித் தேங்காய் எண்ணெயில் குழைத்துத் தடவவும்.

ஜீவகாருண்யம்

குழந்தைகளைக் குணமிக்கவராகப் பழக்கப் பெற்றோர்கள் கருத்தாக இருத்தல் வேண்டும். கண்ட

வைகளையும் கொடுத்து உண்ண வைத்து உடலைக் கெடுத்துவிடக் கூடாது. தேவைக்கு அதிகமாகக் குழந்தைக்குக் கொடுத்து வயிற்றைக் கெடுத்துவிடலாகாது. அடம் பிடித்தால் அடிக்காமல் வேறு விளையாட்டுக் காட்டி அதன் கவனத்தை மாற்றிவிட வேண்டும் மது, மாமிசம், முட்டைகளை வைத்தியர், டாக்டர் தெரிவித்தாலும் கொடுக்கவே கூடாது. கடவுள் மனிதர்களை சைவ உணவு உண்ணும் வகையில்தான் உடல் உறுப்புகளை படைத்துள்ளார். இதனை அறியாமல் மக்கள் மிருகங்களின் மாமிசத்தை உண்ணப் பழக்குவது உடல் அமைப்புகளுக்கும் மனித சுபாவங்களுக்கும் தீங்கு செய்வதாகும். மகா பாவமுமாகும். புலி புல்லைத் தின்னுமா? மாடு மாமிசம் புசிக்குமா? மனிதன் மட்டும் தனக் குண்டான சைவ உணவுகளை விட்டு ஏன் மிருகங்களின் மாமிசத்தைப் புசிக்க வேண்டும்? இது இயற்கைக்கு மாறுபாடு தானே? மனிதனுகப் பிறந்துவிட்டு இராட்சத ஆகாரம் புசித்தால் மனிதத் தன்மை எங்ஙனம் இருக்கும்? உண்ணும் ஆகாரந்தான் உள்ளத்தை உருவாக்குகின்றது. மனிதன் மனிதனுக வாழ வேண்டுமாயின் மாமிச ஆகாரத்தைத் தவிர்க்க வேண்டும். உலகில் இன்று சண்டையும், சச்சரவும், கொலையும், குத்தும் எங்கும் மலிந்து இருப்பதற்கு மூல காரணம் மாமிச உணவின் மலிவுதான்.

தன்ஊன் பெருக்கற்குத்
தான்பிரிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும்
அருள்?

எனத் தமிழ்த் திருமறை மக்களை வினவுகிறது. (தொடரும்)

இருதய பலவீனத்திற்கு

சீமை அத்திப் பழம்!

ஆங்கில மருந்துகளையும், ஊசிகளையும் அடிக்கடி போட்டுக் கொண்டு, அதனுல் ஏற்பட்ட இருதய பலவீனத்திற்கும் இருதய வியாதிகளுக்கும் நாள் தோறும் ஒரு ஆழாக்கு பசும்பாலுடன், அந்த அளவு தண்ணீர்விட்டு கலந்து அதில் ஒரு சீமை அத்திப் பழம், அருகம்புல் சிறிதளவு சேர்த்து கொதிக்க தண்ணீரில் சுண்டக் காய்ச்சி எடுத்து சிறிது கல்கண்டும் சேர்த்து இரவு படுக்கைக்கு முன்பு இளஞ்சூடாக பருகிவர இருதயபலவீனம் யாவும் நீங்கி உடல் வலுக்கும்.

மூலிகையும் போலிகளும்

வணிகநோக்கம் ஏதுமின்றி வாழும்மக்கள் நன்மைகொள்ள
மணிமணியாய்க் குணமளிக்கும் நாட்டு மூலிகை—நம்
நாட்டு மூலிகை !
வணிகநோக்கம் ஒன்றினாலே வாழும்மக்கள் நிதியையெல்லாம்
துணிவுடனே அபகரிக்கும் கூட்டுப் போலிகள்—வெத்து
வேட்டுப் போலிகள் !

எளியமக்கள் ஏக்கமின்றி எளிதில்வாங்கி குணமடைய
ஒளியைப்போல உதவிசெய்யும் நாட்டு மூலிகை—நம்
நாட்டு மூலிகை !
துளியும்நன்மை செய்திடாமல் தூயமக்கள் துன்பங்கொள்ள
நெளியும்நோயைத் தூண்டிவிடும் கூட்டுப் போலிகள்—வெத்து
வேட்டுப் போலிகள் !

ஆழ்ந்தகன்ற அனுபவத்தால் அகத்தியர்கள் ஆழ்ந்துரைத்த
அருமையான முறைமையாகும் நாட்டு மூலிகை—நம்
நாட்டு மூலிகை !
கீழ்மையான எண்ணத்தினால் கிளர்ந்தெழுந்த குறைமதியால்
கிளறிவைக்கும் குப்பையாகும் கூட்டுப் போலிகள்—வெத்து
வேட்டுப் போலிகள் !

வழிவழியாய் வந்ததினால் வளமையுடன் வாழ்ந்துவரும்
வண்டமிழர் களஞ்சியமாம் நாட்டு மூலிகை—நம்
நாட்டு மூலிகை !
பழிவழியே வந்ததினால் பணத்தைநம்பிப் பாழ்மைதன்னைப்
பரப்புவதால் 'பாவம்'என்போம் கூட்டுப் போலிகள்—வெத்து
வேட்டுப் போலிகள் !

அருமையான அன்புநண்பீர் பெருமையான செழுமையுள்ள
திருவைக்கொண்டு திகழுமிந்த நாட்டு மூலிகை—நம்
நாட்டு மூலிகை !
கருப்புநெஞ்சம் கொண்டபேரால் காசுபணம் என்றுவந்து
நெருக்கடியை உண்டுபண்ணும் கூட்டுப் போலிகள்—வெத்து
வேட்டுப் போலிகள் !

-- வள்ளல்.

பயனுள்ள சில குறிப்புகள்

[விமலா]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

(11) கைக்குழந்தைக்கு வெந்நீர் ஊற்ற வேண்டும்' அது பொறுத்துக் கொள்ளும்படியான சூடு என்று எப்படி கண்டறிந்துகொள்வது ?

உங்கள் முழங்கை (முட்டி) யில் கொஞ்சம் ஊற்றிப் பாருங்கள். சுடுகிறதா, குழந்தைக்கும் சுடும்.

(12) கண்களில் தூசு விழுந்துவிட்டது — அரிக்கிறது.

மேலும் நீங்கள் அரக்கி மேலும் வலியை அதிகமாக்கிக் கொள்ளாதீர்கள். தூசு விழுந்ததும் மூன்று அடி பின் நோக்கி நடந்துவிடுங்கள். கண்களில் நீர் வந்துவிடும்; தூசும் வந்துவிடும்.

(13) கண்ணீருக்கு அதிக சக்தி என்கிறார்களே, உண்மைதானா ?

பெண்களின் கண்ணீருக்கு மட்டுமல்ல இது ! மனிதர்களின் கண்ணீருக்கே சக்தி உண்டு. மனிதர்களின் கண்ணீரை ஒரே ஒரு சொட்டு எடுத்து 6000 சொட்டு தண்ணீரோடு விடுங்கள். என்ன ஆகும் தெரியுமா ? அந்தக் கலப்பு நீர் நூற்றுக் கணக்கான நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி படைத்ததாக இருக்கிறது. 'லூஸோஸைம்' என்ற ஒரு வகை ரசாயன சத்து கண்ணீரில் ஏராளமாய் உள்ளது. இதுதான் கிருமிகளைக் கொல்லுகிறது.

(14) என்ன அழகு, என்ன அழகு ! ரதி கெட்டாள், என்று சொக்கிப் போகிறார்கள். அந்த ரதியிடம் என்ன இருக்கிறது தெரியுமா ?

இதுதான் — 30 கரண்டி உப்பு, 50 லிட்டர் தண்ணீர், 5 ராத்தல் சுண்ணாம்பு, 31 ராத்தல் கார்பன், 5 ராத்தல் கோந்து, 5 அவுன்சு சர்க்கரை, 10 கட்டி சோப்பு செய்யக் கூடிய கொழுப்பு, ஒரு ஓநாய்மேல் தடவக் கூடிய கந்தகம் ! இவ்வளவுதான் !

(15) நமது உடல் நடமாடும் தொல்பொருள் காட்சி(மியூசியம்) என்றால் மிகையல்ல இதில்கூட உபயோகமிராத உறுப்புகள் இருக்கின்றன.

மொத்தம் எத்தனை தெரியுமா? 180! இவைகளுக்கு எச்ச உறுப்புகள் என்று பெயர், குத எலும்பும், குடல்வாலும் போன்ற பல உள்ளன.

(16) அரணை கடித்தால் மரணம் என்கிறார்களே, உண்மையா?

இல்லை!

(17) கண்ணுக்கு நல்ல மை ஒன்று சொல்லுங்கள். அதே போல் உதட்டுக்கு நல்லசாயமும், பல்லுக்கு நல்ல பசையும் சொல்லுங்கள். சுருக்கமாக நான் அழகாக இருக்க வேண்டும்.

இது தானே, செலவில்லாமலேயே வழி இருக்கிறது. கண்ணுக்கு நல்ல மை கருணை. உதட்டுக்கு நல்ல சாயம் புன்சிரிப்பு. பல்லுக்கு நல்ல பசை ஒளி. முகத்துக்கு நல்ல பவுடர் களை. காதுக்கு நல்ல நகை நல்ல சொற்கள் போதுமா?

(18) பெற்றோர்கள் குழந்தைகள் மீது மிக மிக அக்கரை கொள்ளுகிறார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் மீது அவ்வளவு பற்று. இந்தப் பற்று நல்லதா கெடுதியா?

முதலாவது இது பற்றே அல்ல. வீண் பயம்! சொல்லப் போனால் இந்தப் பெற்றோர்கள் இரக்க மனப்பான்மையை அளவுக்கு அதிகமாகக் கொண்டு விட்டார்கள். குழந்தையை ஆட விட மாட்டார்கள், அழ விட மாட்டார்கள்... ரொம்ப உஷாராகப் பாதுகாப்பார்கள். குழந்தைக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் என்ற பயமே இப்படி அவர்களை ஆட்டுகிறது. அது அழுதால்கூட என்னமோ ஏதோ என்று பயந்துவிடுவார்கள் வீண் கவலையும் அச்சமும் மிகுந்து விடுகின்றனர். கடைசியில் அது எதற்காக அழுகிறது தெரியுமா? இந்த மாதிரி பெற்றோர்கள் தன்னை அழக்கூட விடமாட்டேன் என்கிறார்களே என்பதற்காகத்தான் அழுகிறது. எவ்வளவு கஷ்டம் பாருங்கள்!

(19) ஆரோக்யம், நற்பணி, அதிருஷ்டம், பண்பு, ரத்தினம் போன்று மக்கள், பேரப் பிள்ளைகள். இந்தப் பாக்கியங்கள் உங்களுக்குக் கிடைக்கட்டும். முழுமையாகவும் முடிவு வரையிலும் சம்பூரணமான வாழ்க்கையின் ஆனந்தத்தில் திளையுங்கள். அதிலே எதிர் படும் வலிவு ஊட்டும் இன்னல்களும், அறைகூவல்களும், அறிவு ஊட்டும் தண்டனைகளும், பரிசுகளும், விலையில்லா சன்மானங்களும், குறைவுபடா செல்வங்களான அழகும் அறிவும் உழைப்பும் அன்புமான இவற்றையெல்லாம் வாழ்க்கையிலே அளித்ததற்காக, ஈசனையும் இயற்கையையும் வந்தனை செய்யுங்கள். (முற்றும்.)

மாதா பிதா செய்தவை மக்களுக்கு !

[எஸ். வி. எம். ஐயங்கார்]

"கடுகைத் துளைத்து ஏழுகடலைப் புகுத்தி"………… தமிழ்த் தோன்றல் ஒருவரின் வாக்கு. ஆம் ! எண்ணிப் பார்க்கவும் இயலா காரியம். மூளைக் குழம்பிய நிலையிலே பிதற்றி விட்டான் போலும் ! கடுகினைத் துளைப்பதாம், கடலினைப் புகுத்துவதாம் ! என்னே, தமிழரின் அறியாமை ! கூறுவான் அயல்நாட்டு அறிவிலி ! உண்மையில் கருத்தாழம் செறிந்த சொல். என்னே அறிவு ! என்னே சிறப்பு ! என்னே நுட்பம் ! புகழ் மாலை சூட்டிப் பூரித்துப் புகன்றாலும் போதா. அள்ளிக் கொடுப்பினும் போதா அவனது அறிவு நுட்பத்திற்கு. ஆம் ! உண்மை அதுவே

பரம்பரை நோய், தொற்று நோய், இன்ன பிற "பிரிவு" நோய்க் கூட்டங்கள். ஒருவன் "பால் உறவு" நோய் மூலம் வருந்தித் தனது மனைவிக்கும் அதனைத் தானம் அளிக்கின்றான் என்றால் காலப் போக்கில் இருவரும் ஒன்று சேர்ந்து ஆரம்பநிலையில், பிறக்கும் தங்கள் குழந்தைகளுக்கும், நோயினைப் பரிசாக அளிக்கின்றனர். ஆயின் இது பரம்பரை நோயின் "பரவல் தானத்தை"க் குறிக்கவே கூறினேன். பரம்பரை நோய் என அறுதியிட்டுக் கூற உதாரணமாக குருதியில் கலந்து உறவாடும் மேகம் எனும் வகையினைக் கூறலாம். இதில் பல வகை உள்ளது. அவையாவும் அதாவது நீடித்த நிறுத்த இயலா இரத்த சீழ் ஒழுக்கினை ஏற்படுத்தும். இதுவே பல தலைமுறைகளுக்கு தொடர்ந்து பரம்பரை ஆஸ்தியாக வரும். ஆஸ்தியில் கண்தெரிந்து உலக இன்பங்களை அனுபவிக்க மக்களுக்குச் சேர்த்து வைக்கிறான், செல்வச் சீமான் என்ற மனிதன். தன்னையறியாமலும் இதைவிட பயங்கரமான ஆஸ்தியான மேற்கூறியவைகளையும் சேர்த்துத் தன் சந்ததிகளுக்கு வைப்பது எவ்வளவு மதியீனம் !

ஆண்டவன் படைப்புகள் யாவும் விசித்திரமும் வியப்பும் அளிக்க வல்லவை ! ஆராய்ச்சிச் சாலை பதில் கூற இயலாத ஒன்று! ஒருவனுக்கும்

ஒருத்திக்கும் ''மண ஒப்பந்தம்'' மூலம் உறவு ஏற்பட்டு பல மழலைகளைப் பெற்றெடுக் கின்றனர். அம்மழலைகள் வளர்ந்து ஆளாகிப் பலப்பல மழலைகளுக்குத் தாய், தந்தை, பாட்டி, பாட்டன் போன்ற உறவுநிலை ஏற்படுத்திக் கொள்கின்றனர். நோய் என்பது தானாக வந்து ஒட்டிக் கொள்வதல்ல. பழக்க வழக்கம், செயல் முறைகள், உணவுமுறை இன்ன பிறவற்றின் கோளாற்றுச் சேர்க்கையினால் ஏற்படுகிறது. பரம்பரை நோய்க்கு இதுவே வித்து. சொல், செய்கை, நினைவு ஆகியவைகளின் கெட்ட மாறுதல்களே ''பரம்பரை நோய்'' என்பதனைக் கைக் கொள்கிறது. இதன் பொருட்டே குலமும், கோத்திரமும் பார்த்தனர் போலும் நம்மவர். ஏனெனில் அவர்களின் சரித்திரம் முழுவதும் அறிந்திருப்பார்கள் அல்லவா! உதாரணமாக மேற்கூறிய பரம்பரையில் தோன்றிய ஒருவன், காமத்தால் கெட்டழிந்து வேறு பலரிடம் உறவு கொண்டு, அயலவள் ஒருத்தியை மணம் புரிந்து பிள்ளையினைப் பரிசாகப் பெறுகிறான் என்றால் தாய்-தந்தை இருவரின் குணத்தோடு, மற்ற பலவும் சேர்ந்து மிளிர்வதைக் காணலாம் குழந்தை பிறக்கக் கலக்கும் ஆண்-பெண் கருவணுக்கள் 2 ஆயிரம் கடுகினைவிட மிகச் சிறிய தன்றே! அத்தகைய அணு- ஆம், ஆண் கரு அணு ஒன்றும்- பெண் கருஅணு ஒன்றும் — ஒன்றே ஒன்று மட்டுமே (சில சமயம் 2-3) சேர்ந்து கலந்து கர்பம் ஏற்பட்டு மகவு பிறக்கிறது. அத்தகைய நுண்ணிய அணுவிற் கொப்பான கிருமிகளின் - ஆண் பெண் கிருமிகளைத் துளைத்து, அறிவு, அழகு, குணம், நிறம் (பரம்பரை) நோய் வித்து ஆகியவைகளை எல்லாம் (அதாவது ஒவ்வொன்றுக்கும், ஒரு ஒரு தலைப்பும் ஒரு பெரும் கடலுக்கு சமமாகக் கருதிய அமைப்பை) ஒருங்கே இன்ன பிறவற்றினையும் விந்து-சுரோணித கணுவினைத் துளைத்துப் புகுத்தி குழந்தை வடிவில் அளிக்கும் ஆண்டவன் (இயற்கை, சக்தி எனப்பல பெயர்கொண்டழைக்கப்படும் ஒன்றினைப்) புகழ்ந்து வியப்பது மட்டும் இக்கட்டுரையின் கொள்கையல்ல. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும், புழுவைப் போல் பிறந்து மடிவதைக் காட்டிலும், செல்வம் சேர்த்து சிறப்புடன் வாழத்தான் வேண்டுமென்ற எண்ணத்தோடு 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றபடி சொத்து சேர்த்து வைக்காவிடினும் நாளைய நமது குழந்தைகள் சிறப்புடன் விளங்க, பரம்பரை நோயின்றி விளங்க, முதலில் தாய், தந்தையர்கள் பொய்யிற் புலவர் கூறியதுபோல் 'ஒழுக்கம் விழுப்பம்தரலால், என்பதற்கொப்ப ஒழுக்கச் சீலத்துடன் வாழ்ந்து அவர்தம் மக்கள் செல்வம் பரம்பரை நோயினின்று விடுபட்டு சீரும் சிறப்பும் பெற்று வாழும் வகையினைச் செய்வதே ஒவ்வொருவரின் கடமையாகக் கொள்ள வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

— (முன் மாதத் தொடர்ச்சி)

"கணவன் வசியமாக"

தேற்ருன் மரப் புல்லுருவியை கிருத்திகை நக்ஷத்திரம், ஞாயிற்றுக் கிழமை, தசமி திதி கூடிய சுபதினத்தில் எடுத்து வத்தி திரித்து பசுநெய் விட்டு மத்தியில் இந்த புல்லுருவை வைத்து எரித்து கரியை நெய் விட்டு குழைத்து மையாக்கிக்கொண்டு தினமும் கண்ணில் (ஸ்திரீகள்) கண்மையாக போட்டு வர பகையாகிவிட்ட கணவன் மீண்டும் மனைவியிடம் பாசம் வைப்பான். (2) மேலும் இந்த தேற்ருன் புல்லுருவியை ரோகிணி நட்சத்திரத்தில் செவ்வாய்க்கிழமை பஞ்சமி கூடிய தினத்தில் முறைப்படி எடுத்து மேல் சொன்னமாதிரி மையாகச் செய்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர பூமியில் புதையுண்ட செல்வம் பொன் வெள்ளி வஸ்துக்கள் தெரியும்! இதே புல்லுருவியை எரிக்காமல் கையில் கட்டிக்கொள்ள சகல வசியமாம்.

தீய வழிகளுக்குத் தீனிபோடும் தன்மை படைத்து வெறும் புற வாழ்க்கைக்கு, சொத்தை குழந்தைகளுக்கு சேர்த்து வைப்பதில், இம்மை இன்பம் மட்டும் கிடைக்கலாம். இதைவிடப் பல ஆயிரமடங்கு பெரிதான உயர்ந்த சொத்து எது? பிணியற்ற நோயல்லாத பரம்பரை அல்லவா? ஏனெனில் அத்தகைய செல்வங்களின் உடல் மணலற்ற கற்பாறைக்கொப்ப வியாதிகளின் வித்துக்கள் தோன்றி வளர வழிகோலாது தடுக்குமன்ருே! தமிழரின் அறிவுத்திறன் புலப்பட்டதா - இல்லை "மாதா - பிதா செய்தது மக்களுக்காகும்" என்னும் சொல்லைக் கூறி தங்களின் அறிவினை இன்னும் தூண்ட வேண்டுமா? கூறுங்கள். (முற்றும்)

"பிறர் கண்களுக்கு தெரியாமலிருக்க"

(1) தருப்பைப் புல்லுருவியை பரணியும் ஞாயிறும் தசமியும் கூடிய தினத்தில் எடுத்து வலது கையில் கட்டிக்கொள்ள அவன் பிறர்கண்களுக்கு தெரியாமல் உலாவலாம். ஆனுல் தருப்பை புல்லில் புல்லுருவி முளைப்பது மகா கடினம். (2) புளியமரப் புல்லுருவியையும் இதேபோல் ஆனுல் மிருக சீரிஷ நட்சத்திரமும் சனிக்கிழமையும் அமாவாசை திதியும் கூடிய தினத்தில் முறைப்படி எடுத்து அதை காராம்பசுவின் பாலில் அறைத்துச் சாப்பிட பிறர் கண்களுக்கு புலப்படமாட்டார். (3) புளியம் புல்லுருவி அகப்படுவதும் கடினமே! (4) மருதோன்றி புல்லுருவியைப் பூராடம் வெள்ளியன்று தசமி திதியில் எடுத்து மைதீட்ட ஒருவர் கண்ணுக்கும் தெரியமாட்டார்கள்.

"சகலவித ரோகங்களும் பரம்பரை வியாதி நீங்கவும்"

(1) நாவல் புல்லுருவியை கிருத்திகை நட்சத்திரத்தில் பாலில் அறைத்துச் சாப்பிட சகல ரோகமும் நீங்கும். மூன்று கிருத்திகை தவருமல் செய்தல் வேண்டும். (2) மிருக சீரிஷத்தில் பௌர்ணமி அன்று புளியம் புல்லுருவியை எடுத்து வந்து பசுமாட்டின் தயிரில் அறைத்து கலக்கிச் சாப்பிட எல்லாவித வியாதிகளும் நீங்கும். இதே புல்லுருவியை வெண்ணை எடுத்த பசுமோரில் அறைத்து உடல் முழுதும் பூசிக்கொள்ள நெருப்பால் அலறி பயப்படுவது நீங்கும். அன்றியும் இந்த புல்லுருவியை அமாவாசை தினம் எடுத்து வந்து வீட்டில் சொருகி வைக்க திருடர்கள் மிரண்டு ஓடிவிடுவார்கள்!.

"தானியம் விருத்தியாக"

(1) தான்றிக்காய் புல்லுருவியை உத்திர நட்சத்திரம் வெள்ளிக் கிழமை சேர்ந்த நாளில் அல்லது பூச நட்சத்திரம் திங்கட்கிழமை சேர்ந்த நாளில் கொண்டு வந்து தானியக் களஞ்சியத்தில் வைக்க களஞ்சியம் குறையாமல் நிறைந்து வரும். (2) அத்திப் புல்லுருவியை பரணியில் வெள்ளியன்று எடுத்து தானியக் களஞ்சியத்தில் வைத்தாலும் களஞ்சியம் குறையாமல் இருக்கும், (3) கிராமங்களில் அத்திப் புல்லுருவியை எடுத்து பொங்கல் விழாவில் பெரும்பானை பொங்கி எடுத்தவுடன் அதன் வாய்ப் புறத்தில் கட்டிவிட்டு பொங்கலோ! பொங்கல்!! என்று கூவி மகிழ்வார்கள்.

இதனால் பொங்கிய பானை என்றும் குறையாது; ஊர் செழித்து வளம் பெருகும் என்பது இதன் கருத்து. இதுபோல தேக்குமரப் புல்லுருவியை மக நட்சத்திரத்திலும் எடுத்து தானியக் குவியலில் வைக்க விர்த்தியுண்டாகும். தும்மட்டிப் புல்லுருவியை அனுஷ நட்சத்திரத்தில் எடுத்து வைக்க களஞ்சியம் பெருகும்.

"துஷ்ட மிருகங்களை அடக்கிவிட"

இலுப்பை மரத்தில் வளரும் புல்லுருவியை ஆயில்ய நட்சத்திரம் சனிக்கிழமை சதுர்த்தசி திதியில் எடுத்து இடுப்பில் அல்லது கையில் கட்டிக்கொள்ள புலி, சிங்கம், கரடி, ஓநாய், யானை போன்ற துஷ்ட மிருகங்களை மிரட்டிவிட அவை நாய்போல அடங்கி ஒடுங்கி படுத்துவிடும். இதை கையில் தரிப்பவருக்கு மிருக பயம் ஒழியும். இதுபோல பூவரசம் புல்லுருவியை ஹஸ்தா நட்சத்திரத்தில் எடுத்து தலையில் வைக்க மிருக பயம் நீங்கிவிடும். (தொடரும்)

உ

நன்றி அறிவிப்பு.

"மூலிகை மணி" வாசக அன்பர்கள், சந்தாதாரர்கள், ஏஜெண்டுகள், "நம் நாட்டு மூலிகைகள்" கட்டுரை வாசக அன்பர்கள் மற்றும் இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் தமிழ் அன்பர்கள் அனுப்பிய பொங்கல் வாழ்த்துக்கள் ஏராளமாக வந்து குவிந்து எல்லையில்லாத மகிழ்ச்சியடைகின்றோம். இவைகளுக்கெல்லாம் தனித் தனியே எழுத இயலாத காரணத்தால் எல்லோருக்கும் எமது இதயம் கனிந்தநன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்,

மூலிகை மணி.

மனித உறுப்புகளில் மூலிகைகளின் குணாதிசயங்கள்!

(சென்ற மாதத் தொடர்ச்சி)

"வாந்தியுண்டாக்கி"

அன்னகோசத்தை எதிர்பக்கமாக இயக்குவித்து உண்ட பொருள்களை வாந்தி எடுக்கச் செய்யும் பொருள்களாவன :—

குப்பைமேனி, நஞ்சுமுறிச்சான், குன்றி, சிறுகுறிஞ்சான், சணப்பு, புகையிலை, தேற்ருன், பீர்க்கு, பேய்ச்சுரை, பேயத்தி, சீக்காய், பேய்பீர்க்கு வசம்பு, மூக்கிரட்டை வேர், விஷ மூங்கில், வெண் கடுகு, மலைவேம்பு பட்டை, வேர்பட்டை, குடியோட்டுப் பூண்டு, காட்டுஇலுப்பை, ஊமத்தை எருக்கு, காக்கை கொல்லி, கறிப்பாலை, கரிசலாங்கண்ணி, கள்ளி, உத்தாமணி, ஆத்து தும்மட்டி, அலரி, அழிஞ்சில் ஆகியன.

"வாத மடக்கி"

வாயுவை உடலில் சேரவொட்டாமல் தடுக்கும் பொருள்களாவன :-

சுக்கு, மிளகு, வாத நாராயணன் விழுதி, தழுதாழை, லச்சகொட்டி (லஞ்சமுண்ட கீரை) மைக் கொன்றை, ஆணைப்புளி, மெருகு, தக்கோலம், செவ்வாமணக்கு, சிற்ருமணக்கு, எரிச்சாலை ஆகியன.

"வியர்வை பெருக்கி"

உடலில் வியர்வையை பெருக்கி வெளியேற்றுகின்ற பொருள்கள் ஆவன :-

வெண் நொச்சி, கஞ்சாங் கோரை, கற்பூரப் புல், கற்பூரவள்ளி, லவங்கம், வெங்கப்பத்திரி, அருநெல்லி, அபினி, இரட்டைப் பேய் மருட்டி, அன்னுசிக்காய், எருக்கு, காட்டுக்கருவாப்பட்டை, பப்ரமுள்ளி, கறிமுள்ளி கறிப்பாலை, காஞ்சொரி, குந்திரிக்கம், தாழை, தரா, சந்தனம், சரள தேவதாரு, கோட்டம், கோட்டம், குருவேர், கோரை, கோவை, பற்பாடகம் பவளமல்லி, நெய்ச்சட்டி, நாபி, துளசி, நல்வேளை விதை, சூரியகாந்தி, சிறு நாகப்பூ, நன்னுரி, மருக்காரைப்பழம், மணித்தக்காளி, பொன்முசுட்டை பீநாரி மரம், பால் வள்ளி, பேராமுட்டி, மயிர்மாணிக்கம் வேர், மாசிப் பத்திரம், வில்வ இலை, மாம்பழம், வாலுழுவையரிசி, விஷமூங்கில், யானைத் திப்பிலி, மிளகரணை, வெண்கொடிவேலி, விஷ்ணுக்கிராந்தி, ஆகியன வாகும்,

"வீக்கம் கரைச்சி"

உடலின் சதை நாளங்கள் வீங்கி புடைத்து எழும்பியவைகளை கரைத்துவிடக்கூடிய வஸ்துக்கள் :-

விராலி இலை, தழுதாழை, புளியிலை, வாதநாராயணன், கருஞ் செம்பை, உத்தாமணி, கறிமுள்ளி, தூதுவளை, பொடுதலை, விழுதியிலை, சுளுக்குநாயகம், குப்பைக்கீரை, மிளகு, வெண்கடுகு, முருங்கைப்பட்டை கற்பாசி, பவளமல்லி முதலியனவாகும்.

(தொடரும்)

இராசி பலன்

நமது பத்திரிகையில் தொடர்ந்து வந்த **நவகோள் முன்னறிக்கை** என்பது மாத ராசி பலன். இதை பல வாசக அன்பர்கள் விரும்பவில்லை என்பதை கடிதங்கள் மூலம் அறிந்தோம். மேலும் 'உங்கள் ராசி பலன்' என்று எல்லா பத்திரிகைகளிலும் வெளியாவதாலும், இனி இந்தக் கட்டுரையைத் தொடராமல் வேறு பயனுள்ள விஷயங்களுக்கு மேல்படி இடத்தை பயன்படுத்தப்படும் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

மானேஜர்,

மூலிகை மணி.

உ

"மூலிகை மணி" நிதி நன்கொடை

இம்மாதம் அனுப்பிய அன்பர்கள்.

திரு.	ஏ. எஸ். அருணாசலம் பிள்ளை, பேக்கரி, வேலூர். ரூ.	25	00
,,	ஏ. பிராணம், புதுக்கோட்டை போஸ்ட்.	11	00
,,	ஏ. என். ராமநாதன் செட்டி, குமாரவேலூர் போஸ்ட்.	10	00
,,	ஆர். வீராசாமி ரெட்டியார், திருமங்கலம் போஸ்ட்.	10	00
,,	டி. வைத்தியசேகர பாண்டியன், அ. பொம்மய்யாபுரம்	10	00
,,	எஸ். டி. என். முத்தையா, நரசராவ்பேட்டை.	10	00
,,	எஸ், கே. ராமசாமி, சென்னனூர், தென்கரை.	10	00
,,	என். சீனிவாசன், சாத்தாம்பாடி.	10	00
,,	என். ஆர். எம். சுப்பையா, வில்லியம்ஸ்ரோட்.	10	00
,,	கே. பழனிசாமி, பி. ஈ. விலாட்டிகுளம்.	10	00
,,	எஸ். எம். வெங்கடாசலம், மாமார்குடி.	10	00
,,	ஆர். நடராஜன், ஆம்பூர்.	10	00
,,	எஸ். பூவராகலு, கஞ்சனூர்.	10	00
,,	வி. ராமசாமி, ராயவரம்.	4	20
,,	ஜே. சாமுவேல் தைக்காடு.	3	00
,,	கே. எஸ். சுகவனம், சென்னை-28.	2	00
,,	எஸ். துரைசாமி, கிளன்மார்கன் எஸ்டேட்.	1	90
,,	வி. கே. சிவராமன், பண்ருட்டி.	1	00
,,	ஏ. பெரியசாமி, பெண்ணாடம்.	1	50
,,	கே. பி. லட்சுமணன். குமாரபாளையம்.	0	90
,,	வி. திருநாராயணன், சீர்காழி.	0	50
,,	என். வி. கமலநாதன், ராணிப்பேட்டை.	0	44

குறிப்பு :- இதுவரை மூலிகை மணி நிதி நன்கொடையிலிருந்து பல பொது நன்மைக்காக செலவிடப்பட்டது. இந்த இதழிலிருந்து ஒரு ஒரு பகுதியை பத்திரிகை பேப்பர் அரிதாகிவிட்ட படியால் பேப்பர் கொள் முதலுக்கு பயன்படுத்தப்படும். பிரபல பத்திரிகைகள் எல்லாம் பேப்பருக் காக மிகவும் சிரமப்படும்போது மூலிகை மணிக்கு பேப்பர் கோட்டா பெர்மிட் இல்லாமல் சந்தா நேயர்கள், வாசக அன்பர்கள் ஆதரவிலேயே நடந்து வருவதும், ஆடம்பர விளம்பரங்களை வாங்கி பிரசுரம் செய்து பணம் சேர்க்காமல் நடப்பது குறித்து பல அன்பர்களிடமிருந்து மகிழ்ச்சி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர், அவர்கட்கெல்லாம் எமது நன்றி.

மானேஜர்,

மூலிகை மணி.

இதய ஒலி

சென்னை-16,
12-1-'66.

ஆதம்பாக்கம் தர்ம வைத்தியசாலை

அன்பார்ந்த டாக்டர் கண்ணப்பர் அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் வெளியிட்டுள்ள "நம் நாட்டு மூலிகைகள்" என்னும் புத்தகத்தைப் படித்து அதன்படி சில வியாதியஸ்தர்களுக்கு சிகிச்சை செய்து வருகிறேன். நல்ல குணம் தெரிகிறது. என்னிடமும், இதர பல பிரபல டாக்டர்களிடமும் சிகிச்சை பெற்று குணம் தெரியாத நோய்களும் கூட எளிய உமது மூலிகை மருத்துவ சிகிச்சையால் குணமாகிறது தங்களின் மாத சஞ்சிகை "மூலிகை மணி" தமிழ் மக்களுக்கு ஓர் அரிய ஆரோக்கிய வழிகாட்டியாகும், உங்கள் தொண்டு இறைவன் அருளால் மேலும் சிறப்புடன் ஓங்கி வளர வேண்டுதல் செய்கின்றேன்.

தர்ம வைத்தியசாலை,
ஆலந்தூர்.

டாக்டர், ஸ்ரீனிவாசன்
ரிஜிஸ்டர்ட் மெடிகல் பிராக்டிஷனர்.

1—2—'66.

ஜெயா பார்மஸி

என்னுடைய நண்பர் உரலுப்பட்டி கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுக்கு கால், கையெல்லாம் பாளம் பாளமாய் வெடித்து சுணை நீர்களாக வடிந்துக்கொண்டு உள்ளங்கைகள் எல்லாம் கரும்புள்ளி போட்டு எங்கும் நடக்கமுடியாமல் பல ஊசி மருந்துகள், மாத்திரைகள் கணக்கில்லாமல் கொடுத்து பத்தியமிருந்தும், வியாதி தீராமல் ரொம்பவும் அவஸ்தைப் பட்டு வருந்தினர். பிறகு தங்களின் 'நம் நாட்டு மூலிகை' புத்தகத்தில் குறிப்பிட்ட வெள்ளெருக்கன் வேர் பட்டையை முறைப்படி செய்து கொடுத்தேன். மருந்தை உள்ளுக்குக்கூட சாப்பிட தரவில்லை. எண்ணையுடன் கலந்து மேல்பூச்சாக தடவி வந்தோம். பல ஆண்டுகளாக இருந்த ரணம் சுத்தமாகிவிட்டது. நாங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. தங்களையும் ஆண்டவனையும் மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

உடுமலை தாலுக்கா.

பி. சின்னப்ப பிள்ளை,
கொமரலிங்கம் போஸ்டு.

அன்புடையீர்! திண்டுக்கல். (மதுரை ஜில்லா)

தாங்கள் அனுப்பிய மூலிகை மணி இதழ்கள் கிடைத்தன. ஆனால் தை இதழ் அனுப்பியதாக எழுதியிருந்தீர்கள். இதுவரை கிடைக்கவில்லை தபால் இலாகாவில் இப்படி அடிக்கடி தவறுதல்கள் நிகழ்வது மிகுந்த வருந்தத்தக்க விஷயமாகும். இதுபற்றி தபால் அதிகாரிகளுக்கு தெரிவித்து இருக்கிறேன். தங்களுடைய குன்றுத உழைப்பாலும்; முருகனின் அருளாலும் "மூலிகை மணி" சிறந்தோங்க வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன். இவ்விடம் மூலிகை மணியையும், தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் அரும் தொண்டினையும் பற்றி பேசாத நாளே கிடையாது. நான் வெகு தூரத்தில் இருப்பினும் தங்களின் மூலிகைமணியால் அருகில் இருப்பதாகவே உணர்ச்சி ஏற்படுகிறது. வணக்கம்.

திண்டுக்கல் நகரசபை, டாக்டர். டி. ஜி. ரங்கராஜன்,
15—1—'66. முனிசிபல் ஹெல்த் ஆபீஸர்.

அழகிய பாண்டியபுரம் போஸ்ட்.

அறிவும் ஆற்றலும் மிக்க டாக்டர் அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் தாய் தந்தையர் வாக்காக, ஆண்டவன் அருள் சுரந்து கண்ணப்பர் என்ற திருப்பெயரை இடச்செய்தான் போலும்.

பேரழகின்பம், பிணி, மூப்பு, சாக்காடு, ஆறும் கருவிலமைந்தபடி என்றபடி எல்லாம் தங்களுக்கு அமைந்துள்ளன. மேலும் 'அறநெறிச் சேர்தற்குச் செய்க பெருநூலை' என்ற தத்துவப்படி தங்கள் ஆசான் பி. வி. எம். குமரசாமி செட்டியார் மூலம் கேட்டறியவும், பெரிய மேதைகளோடு பழகின அறிவும், கால அறிவுமாக உள்ள அனுபவ அறிவும் சேர்ந்து முழுமை அறிவு கைவரப்பெற்று பிற உயிர்கட்கு, நடமாடும் தெய்வங்கட்கு தொண்டு செய்து ஞானக்கண்ணை அப்புகின்ற கண்ணப்பா! நீவீர்வாழ்க! நலம் பல பெற்று பல ஆண்டுகளாக தங்கள் கட்டுரைகளில் தமிழலக்கண, இலக்கியங்களிலும் நல்ல பாண்டித்யமும், மூலிகைகளுக்கு கொடுக்கிற விளக்கங்கள், மேற்கோள்கள், நகைச்சுவைகள், தேவார திருவருட்பா, திருவாசக - பாடல்கள், மருத்துவத் துறை ஆராய்ச்சி, மாந்திரீகம், மேனாட்டு மருத்துவத்தின் தீக்குணங்களின் ஆராய்ச்சி இவைகளைப் பற்றியுள்ள திறமை யாவும் கண்டு இன்று தமிழ்க்கூறும் நல்லுலகமே நற்பயன் அடைந்துள்ளது என்பதனை மறுக்க இயலாது. மேன்மேலும் நம் நாட்டு மூலிகைகளின் அருமை பெருமைகளை உலகு உணரச் செய்ய இறைவன் அருள்பாலிக்க வேண்டும்.

காஞ்சிமடம், கேசவன்புதூர். எஸ். வேதநாயகம் பிள்ளை,
17—1—'66. வடக்குத் தெரு

ஐயா, சிதம்பரம்.

தங்கள் மூலிகை மணியை 15-மாதங்களாக படித்து வருகிறேன். நல்ல அரிய விஷயங்களை மக்களுக்கு எளிய நடையில் விளக்கியும் தொண்டு செய்து வருகிறீர்கள். அத்துடன் மக்களுக்கு சித்த வைத்திய மான நாட்டு வைத்தியத்தின் பேரில் இருந்த ஒருவித கிலியையும், அருவருப்பையும் நீக்கி பற்றுதலை உண்டாக்கிவிட்டீர். இவை எல்லாம் எங்களுக்கு ஒரு பாடமாக இலவச வைத்தியம் செய்தும் பொருள் உதவி செய்தும் மற்ற வைத்தியர்களுக்கும் வழி காட்டியுள்ளீர்கள் தங்கள் தொண்டு நீடுழி வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்கிறேன். வணக்கம் பல.

36-எ, தெற்கு வாணியர் தெரு, சிதம்பரம்

டாக்டர் டி. ஆறுமுகம், ரிஜிஸ்டர்ட் மெடிகல் பிராக்டிஷனர்.

ஐயா, மதுரை.

நான் தங்கள் மூலிகை மணி மருத்துவ மாத இதழை எங்கள் மதுரை கிழக்குப் பஞ்சாயத்து யூனியன் மூலம் 38 பஞ்சாயத்துக்கும் யூனியன் ஆபீசுக்கும் சேர்த்து வாங்கும்படி மீட்டிங்கில் தீர்மானம் பேசடப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். விரைவில் உத்திரவு வந்ததும், மாதந்தோறும் அனுப்ப வேண்டிக்கொள்கிறேன்.

கள்ளந்திரி போஸ்டு. வணக்கம். வ. சு. ம. மந்தையன், அம்பலம்.

அன்புடையீர்! கோவை ஜில்லா

நமது காலம் சென்ற பிரதமர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி, மற்ற நாட்ட வர்களைக் காட்டிலும் இந்தியர் ஆற்றலும், திறமையும், அறிவிலும் சிறந்த வர்கள் என்பதை அகில உலகத்துக்கும் எடுத்துக் காட்டியது போல் அந்நிய நாகரீக மருந்துகளையும், ஊசி முறைகளைக் காட்டிலும் பன்மடங்கு நம் நாட்டு வைத்தியம் சிறந்தது என்பதை தங்கள் "மூலிகை மணி" உலகுக்கு உணர்த்தி வருகிறது என்பதனை திடமாகக் கூறுவேன்.

குப்பாண்டம்பாளையம் போஸ்டு. கே. கே. முத்து.

உ

பவானி விழா அனுபந்தம்

நம் நாட்டு மூலிகைகள் இரண்டாம் பாக வெளியீட்டு விழா.

- ஆசிரியரின் நேர்முக வர்ணனை.

எல்லாம் வல்ல முருகன் திருவருளால் தினமணியில் பல ஆண்டுகளாக வெளிவந்த நம் நாட்டு மூலிகைகள் முதல் பாகம் வெளியாகி ஏறத்தாழ 9-மாதம் ஆயின. இரண்டாம் பாகத்திற்கு செய்த முயற்சிகள் யாவும் ஏதோ ஓர் சூழ்நிலையால் காலம் தாழ்த்தி வந்தது. படம் வரையவும் அதை பிளாக் செய்யவும், காகிதப் பற்றுக்குறையை நிறை செய்யவும். அடுத்த மாதம், அதற்கடுத்த மாதம் இப்படியாக தள்ளிபோட நேர்ந்தது.

"மூலிகை மணி" தை இதழிலும் அறிக்கை விடப்பட்டுவிட்டது! புத்தகமும் ஒருவாறு முடிந்துவிட்டது. இதை வெளியிட தேதியைக் கேட்டு எனது குருநாதர் ஸ்ரீ வாரியார் சுவாமிகளுக்கு கடிதம் எழுதினேன். அவருக்கு எங்கே நேரம் இருக்கிறது! தென்னுட்டின் திருப்பணிகள், கும்பாபிஷேகம் போன்றவைகளுக்கெல்லாம் சுவாமிகள் தலைமை வகித்தால்தான் சிறப்பாக நடக்கும். காலையில் ஒரு இடத்தில் சொற்பொழிவாற்றுவார், மாலை 200 மைல்களுக்கப்பால் பிரசங்கம்! சூராவளிப் பயணம். எப்பொழுது உறங்குவாரோ, விழிப்பாரோ, யாருக்குமே தெரியாது! இவ்வளவுக்குமிடையே தனக்கு வரும் கடிதங்களுக்கு பதில் போட தவறியதில்லை. அதோடு அனுஷ்டானங்கள் பூஜை இவைகளுக்கு தினம் 3-மணி நேரம் ஒதுக்குவதிலும் தவறியதில்லை.

எனது கடிதம் அவருக்குப் போய் சேர்ந்ததோ அல்லது போஸ்டாபீசுக்கு போஸ்டாபீஸ் தாவிக்கொண்டிருக்கிறதோ எனக் கவலையில் ஆழ்ந்து கிடந்தேன்.

தினமும் வாசக அன்பர்களிடமிருந்து இரண்டாம் பாகம் கேட்டு வரும் கடிதங்கள் கட்டுக்கடங்காமல் வர ஆரம்பித்துவிட்டது. திடீரென ஒரு நாள் எனது முதுபெரும் நண்பர் திரு. மு. பெருமாள் முதலியார் ஒரு கடிதத்தை கொண்டு வந்தார். அதே சமயம் சுவாமிகளிடமிருந்து கடிதம் வந்ததாக நமது காரியாலய மேனேஜர் கொண்டுவந்து தந்தார்.

இரண்டு கடிதங்களிலும் ஒரே மாதிரியான தகவல்கள்தான். பவானியில் 27—1—'66 தேதியோடு மகாபாரதம் முடிவடைகிறது. 28—1—'66 மதுரையில், 29-1-'66ந் தேதி பாண்டியில் சொற்பொழிவு. உங்கள் வசதி போல் எங்கு வேண்டுமோ? அங்கு வெளியீட்டு விழாவை வைத்துக்கொள்ளலாம். ஆனால் பவானியில் நிறைய கூட்டமிருக்குமாதலால் விழா சிறப்பாக அமையும் என்று எழுதியிருந்தது. இதைக் கண்டதும் எனது கவலையெல்லாம் பறந்துவிட்டது. புறப்பட ஆயத்தமானேன். ஆனால் பவானிக்கு யான் முன்பு சென்றதில்லை, இராயவேலூரிலிருந்து பவானிக்கு ஏறத்தாழ 220 மைல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். நெடுவழிக் கொருதுணை இல்லையே என்று நினைத்த எனக்கு ஓர் துணையும் கிடைத்தது.

எனது நண்பரும், வேலூர் பிரபல ரொட்டி வியாபாரம், திரு. ஏ. எஸ். அருணாசலம் பிள்ளை அவர்கள் கருணையே உருவானவர். அநேக பொதுப் பணிகளிலும், தொண்டுகளிலும் ஈடுபாடு உடையவர். கல்வி கற்கும் மாணவர்களுக்கு பலவிதங்களில் உதவி வருபவர். இவரது முயற்சியால் வேலூரில் துரிதமாக அரசினர் கலைக்கல்லூரி திறந்து நடந்து வருகிறது. வேலூர் கோட்டைக் கோயில் திருப்பணிக்கு பொக்கிஷதாரர். நமது வாரியார் சுவாமிகளுக்கு மிகவும் வேண்டியவர். எனவே "சுவாமிகளை பார்க்கவேண்டும் போல இருக்கிறது. நாளை 25—1—66 புறப்படுகிறேன், தாங்களும் என்னுடன் வந்தால் நான் சுவாமிகளைப் பார்த்தாற் போலவும், தங்கள் புத்தகம் வெளியீடு செய்தது போலவும் ஆகும் என்றார்." யானும் புன்னகையுடன் தலையசைத்தேன்.

செவ்வாய்க்கிழமை 25—1—'66 காலை 8-மணிக்கு ஏ. எஸ். ஏ. பிள்ளையவர்களின் கார் புறப்பட்டது. கார் புறப்படு முன்பு யான் ஒரு எலுமிச்சைப் பழத்தை அறுத்து நான்கு சக்கரத்திலும் வைத்தேன். கார் பவானியை நோக்கி ஓட ஆரம்பித்து 12 மைல் போயிருக்கும். பள்ளிக்கொண்டா சமீபம், கீரீச் என்ற சப்தத்துடன் திடீரென வண்டி நின்று விட்டது. சிறுவர்கள் இருவர் ஒருவரையொருவர் துரத்திக்கொண்டு ஒருவன் பாதையைத் தாண்டிவிட்டான். மற்றவன் வேகமாக ஓடி வருகிறான்! டிரைவர் சட்டென முழுபலத்தையும் உபயோகித்து பிரேக் போட; கார் டயர் நொய்... என்ற சப்தத்துடன் தேய்ந்து வண்டி நின்று, தொட்டில் போல் முன்னும் பின்னும் ஆடவும், இரண்டாவதாக ஓடிவந்த பையன் வேகமாக வந்து வண்டியை முட்டித் தள்ளி கீழே விழுந்து விட்டான். அந்த பையன் வந்து மோதிய வேகத்திலே, பற்களிலிருந்து இரண்டு துளி ரத்தம் கசிந்தது! "நல்லவேளை பையனுக்கு ஒன்றுமில்லை.

வண்டிக்கும் சேதமில்லை. வண்டியை எடுங்கள் சார் மெயின் ரோட்டிலே பசங்களை ஆடவிட்டு வேடிக்கைப் பார்க்கிறுர்கள்'' என்று பின்னுல் வந்த பஸ் கண்டக்டர் சொல்லவும் நாங்கள் கிளம்பினேம்.

கார் டிரைவர் சொன்னுர் ''இதுவரையிலும் ஒரு சிறு விபத்துகூட ஏற்பட்டதில்லை. எலுமிச்சம் பழம் சுற்றிப் போட்டதால்தான் இப்படி ஏற்பட்டதோ என்று'' நான் ஒன்றும் பதில் சொல்லாமல் புன்னகை புரிந்தேன். அதற்கு பிள்ளையவர்கள் சொன்னுர் ''அப்படியல்ல, அந்த எலுமிச்சம் பழத்தின் மகிமைதான் இந்த பெரிய விபத்தில் இருந்து தப்பிக்க செய்தது என்று நாம் சொல்ல வேண்டும்'' என்ருர். பிறகு அவர் தம்முடைய சிறு வயது சம்பவங்களைக் கூறலானுர்: கல்வி கற்பதற்காக வேலூர் வந்து குடியேறி, திண்ணைப்பள்ளிக்கூடங்களின் சாகாக்கல்வியின் பெருமைகளையும், அந்த காலத்து படிப்பின் தரத்தையும், வியாபார ஒழுக்கத்தையும் சுவைபட எடுத்து கூறிக்கொண்டே வந்தார். சிறு வயதில் அவர் விடாமுயற்சியுடன் பல கஷ்டங்களையும் அனுபவித்து வாழ்க்கையில் முன்னேறியதைக் கேட்க யான் ஆச்சர்யப்பட்டுப் போனேன்.

பகல் 1-மணிக்கு கார் மேட்டூர் அணைக்கு வந்து நின்றது. எங்களோடு உடன் வந்திருந்த ராமலிங்கம் உயர்நிலைப் பள்ளி மானேஜர் திரு. மகாலிங்க ஐயர் அவர்கள் கொண்டு வந்த சோற்று மூட்டையை அவிழ்த்தார். எலுமிச்சம் பழம் சாதம், தயிர் சாதம், வெகு ருசியாக இருந்தது. உண்ட பின் 2-மணி வரை களைப்பாறிவிட்டு புறப்பட்டோம் பவானிக்குச் சரியாக 4-மணிக்கு வந்து சேர்ந்தது.

எங்களுக்கு பவானி திருமுறை கழகத்தாரால் ஜாகை வசதி செய்து தரப்பட்டது. அங்கு பனிரண்டு நாட்களாக மகாபாரத சொற்பொழிவு நிகழ்த்தும் நமது சுவாமிகளை பகலில் எங்காவது அழைத்துப் போய்விடுவார்கள். சுவாமிகளுக்கு வேண்டியவர் என்ற காரணத்தால் எங்களுக்கு பவானியில் ராஜோபசார விருந்துகள்தான் போங்கள். மேலும் 'மூலிகை மணி' வாசக அன்பர்கள், தினமணி சுடரில் நம் நாட்டு மூலிகைகளை வாசித்த நேயர்கள் ஆகியோரின் அளவுகடந்த அன்புக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையே இல்லை.

பவானியில் தங்கிய மூன்று தினங்களும் எங்களுக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாகும். ஊருக்கு கிழக்கே காவேரி நதி, மேற்கே பவானி நதியும் வடக்கிருந்து வந்து தெற்கே கூடுகின்றது. கூடுமிடத்தில் தான் ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயம் உள்ளது. மிக உயர்ந்த ஸ்தலம். தக்ஷிணப் பிரயாகை என்று சொல்லுவார்கள். இந்த கோவிலை புதுப்பிக்க

பல ஆண்டுகளாக வேலை நடந்து வருகிறது. 11 லக்ஷத்திற்கு மேலும் பணம் செலவாகி கோபுரம் எழும்பவில்லை. சிற்பிகளும், கல்தச்சர்களும் நாள் தோறும் நூற்றுக் கணக்கில் வேலை செய்து வருகின்றனர். கற்களில் சிற்ப வேலைகளைச் செய்து அவைகளை பழங்கால முறைப்படி ஆட்களால் மிகவும் கஷ்டப்பட்டு மேலுக்குத் தூக்க வேண்டியிருக்கிறது! இதனுல் கால தாமதமும், பணம் வீண் விரையமும் ஆகி வருவது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் சிற்பிகளுக்கு வேலை துரிதமாக ஆகவேண்டும் என்ற ஊக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. பெரிய பெரிய கற்களை (நவீன முறையில்) எளிதாகத் தூக்கும் பாரந் தூக்கி எந்திரங்களைக் கொண்டு சுலபமாக எடுத்து வைக்க ஏன் அவர்களுக்கு தெரியவில்லை? என்பது ஒரு புதிராக இருக்கிறது!

என்னவோ; நாம் வந்த விஷயம் வேறு. எனவே இதைப்பற்றி ஒருவரிடமும் விவாதிக்கவில்லை. ஆலயத்தின் நுழைவாயில் கோபுரத்தை 1 லக்ஷ ரூபாய் செலவில் புதுப்பித்து தருவதாக நமது தென்னுட்டின் பிரபல தொழில் அதிபரும், நமது சுவாமிகளின் பேரில் பக்தி சிரத்தையுடைய வருமான பொள்ளாச்சி திரு. மகாலிங்கம், எம், எல். ஏ. அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிகிறது. இம் மாதிரி திருப்பணிகளுக்கு தனவந்தர் கள் தங்களை ஈடு படுத்திக் கொள்வது அரிது. இதற்கு உயர்திருவாளர் மகாலிங்கம் அவர்கள் விதிவிலக்காகி நிற்கிருர்! வாழ்க அவர் நீடூழி!!

ஆலயத்தின் தெற்கே கூடும் நதிகளில் அதிகாலையில் மக்கள் வந்து கூடி நீராடுகிருர்கள். குளிப்பதற்கென்றே படித்துறைகளும், வெள்ளம் நிறைய வரும்போது ஆற்றில் விழுந்துவிடாமல் இருக்க சுற்றி கம்பிக் குழாய்களை போட்டு வைத்து இருக்கிருர்கள். இந்த சங்கமத்திலே நீராடியவர்கள் செய்த வினையெல்லாம் தீருவதாக இந்த ஸ்தலப் புராண வரலாறு கூறுகிறது. பல சுப அசுப காரியங்களுக்கு இந்த சங்மத்திலிருந்து நீரைக் குடத்தில் ஏந்தி, மேள, தாளம், தாரை தப்பட்டையுடன் மக்கள் தினந்தோறும் எடுத்துச் செல்வதும் பவானியின் சிறப்பான அம்சமாகும். எனது நண்பர் ஏ. எஸ். ஏ. அவர்கள் உடல் நலமில்லாமல் இருந்தும் இந்த நதியில் நீராடவேண்டும், அதற்கென்றே வந்ததாக சொல்லி அங்கிருக்கும் வரையில் நீராடினேம். பவானி நல்ல இயற்கை எழில் வாய்ந்த இடம் அந்த ஊர் வாசிகளும் அன்பும் பண்பும் நிறைந்தவர்கள்.

வெளியீட்டு விழா தேதி பிறந்தது. 27—1—'66 அன்று பவானி யில் மகாபாரதம் முடிவு இறுதிநாள். எனவே திருமுருகன் அருள் பெற்ற நமது கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களை நன்கு அலங்கரிக்கப் பட்ட வண்டியில் வைத்து திருவீதி சுற்றுலா நடந்தது. மாலை 4-மணி

வீதியெல்லாம் நீர் தெளித்து கோலங்களைப் போட்டு மாவிலைத் தோரணங்களைக் கட்டி ஊரே கொண்டாட்டத்தில் தளைத்தது. ஏகக் கூட்டம்! ஊர்வலத்தில் நாதஸ்வரவித்வான் திரு வீருசாமி பிள்ளை அவர்கள் கச்சேரி! இன்னும் பல நிகழ்ச்சிகள்! ஊர்வலம் சரியாக 8 30-மணிக்கு முடிந்தது. 9 மணிக்கு மகாபாரத முடிவுரை சொற்பொழிவு. அன்று கூட்டம் பழநி தேவஸ்தானம் நிர்வாக டிரஸ்டி உயர்திரு. வி வி. சி. ஆர். முருகேச முதலியார் தலைமை வகிக்க, ஊர் பிரமுகர்களையும், பிரபலஸ்தர்களையும் கௌரவித்த பின்பு சுவாமிகளுக்கு பொன்னுடை போர்த்தப்பட்டது.

கூட்டம் சொல்லமுடியாத அளவுக்கு அப்போது நிறைந்துவிட்டது, நமது வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள வந்த சுற்றுப்புற மக்கள்வேறு அன்று பவானிக்கு வந்தபடியால் ஜனசமுத்திரமே திரண்டு வந்ததுபோல் ஆகிவிட்டது. சரியாக 10-30-மணிக்கு "நம் நாட்டு மூலிகைகள்" இரண்டாம் பாகத்தை சுவாமிகள் திருக்கரத்தால் எடுத்து மூலிகைகளின் பெருமைகளைக் கூட்டத்தில் எடுத்துரைத்து இரண்டாம் பாகத்தை பழநி தேவஸ்தான நிர்வாகஸ்தர் திரு. முருகேச முதலியாருக்கும், வேலூர் நண்பர் திரு. ஏ. எஸ். அருணாசலம் பிள்ளையவர்களிடமும், நாதஸ்வர வித்வான், திரு. வீருசாமி பிள்ளை அவர்களுக்கும் முதன் முதலாகக் கொடுத்து வெளியிட்டார்கள். அங்கு கொண்டு சென்ற புத்தகங்கள் மிகச் சிலவே எனவே விரைவில் புத்தகம் தீர்ந்துவிட்டது.

பேரருள் பெற்ற குருவே வாழ்க!

சரியாக 1-மணிக்கு கூட்டம் முடிந்தவுடன் உடனே புறப்பட்டு விட்டார் சுவாமிகள் மதுரைக்கு! இவருக்கு இத்தகைய ஆற்றலும், ஊக்கமும், மக்களை ஆஸ்தீகத் துறையில் இழுக்கும் சக்தியும், அயராத உழைப்பும் எப்படித்தான் கிடைத்ததோ? முருகனின் திருவருள்தான் அவரைப் பாதுகாத்து வருகிறது. நம்மை எல்லாம் நல்வாழ்வு பெற ஊக்குவிக்கும் அவர் நீடூழி வாழ பிரார்த்திப்போமாக என்று நினைத்துக் கொண்டே அவரை வழியனுப்பிவிட்டு நாங்களும் ஒருவிதஇடையூறுமின்றி ஊர் வந்து சேர்ந்தோம்.

வெளியீட்டு விழாவினை சிறப்பித்து தந்த பவானி மு. கண்ணப்பருக்கும், திருமுறைக்கழகத்தாருக்கும்,மார்கபந்துபோல வழித்துணையாக வந்து உதவிய ஏ. எஸ். அருணாசலம் பிள்ளையவர்களுக்கும், அன்பர்களுக்கும் எனது மாணவர்களுக்கும் எனது இதயங் கனிந்த நன்றியை மூலிகை மணி வாசக அன்பர்கள் சார்பில் செலுத்துகின்றனன். வாழ்க நம் நாட்டு மூலிகைகள்! வளர்க நமது மக்களின் ஆரோக்கியம்!!

(சுபம்.)

புகைப்பட விளக்கம்.

படம் நெ. 1 திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் வேலூர் பிரமுகர் திரு. அருணசலம் பிள்ளை அவர்களிடம் புத்தகத்தை வெளியிடுகின்ருர்.

படம் நெ. 2 விழாத்தலைவர் திரு. வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்களுக்கு ஆசிரியர் மாலையிடுதல்.

படம் நெ. 3 நாதஸ்வர வித்வான் திரு, வீறுசாமி பிள்ளை அவர்கள் சுவாமிகளிடமிருந்து புத்தகத்தைப் பெறுகிருர்.

படம் நெ. 4 திரு. வி. வி. சி. ஆர். அவர்கள் சுவாமிகளிடமிருந்து புத்தகம் பெறுதல்.

படம் நெ. 5 (இடமிருந்து வலம்) திரு. வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் (தலைவர், பழநி தேவஸ்தானம்) அவர்கள் அருள்மொழியரசு சகலகலாநிதி. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள் ஆசிரியர் வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்கள்

இப்பொழுது கிடைக்கிறது!

"நம்நாட்டு மூலிகைகள்" இரண்டாம் பாகம்

நீங்கள் நெடுநாட்களாக எதிர்ப்பார்த்து இருந்த புத்தகம் விலை ரூ. 3—00. தபால் செலவு உள்பட ரூ. 3—20. மணியார்டர் அனுப்புவோருக்கு தபால் வழி கிடைக்கும். முதல் பாகம் விலை ரூ. 2—85. தபால் செலவு உள்பட ரூ. 3—10 ஆகும் இரண்டு பாகமும் ஒரே தடவையில் வாங்குவோர் ரூ. 6—00 மணியார்டர் அனுப்பினல் போதும். V. P. P. கிடையாது.

நிர்வாகி:

தபால் பெட்டி நெ. 26. போன் நெ 726.

மூலிகை மணி காரியாலயம்,

33/1, தென்ன மரம் தெரு, வேலூர் (வ. ஆ.)

சென்னையில் கிடைக்குமிடம்:-

V. P. விஸ்வநாத செட்டியார்,

29, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1. போன்: 20104

மலாய் திருமுறைக் கழகம்
வெள்ளி விழா
4-1-66 முதல் 27-1-66 வரை





புகைப்படம் : சாந்தி ஸ்டுடியோ, ஈரோடு.

மூலிகை மணி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்
ஆ. இராசகண்ணப்பர், 33-1 [illegible] நகர், வேலூர், (வ. ஆ.)